விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை (27.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130




## புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை

# வடக்கைக் கைப்பற்றும் காலம் மிகத் தூரத்திலில்லை



## இராணுவத் தளபதி கருத்து

(கொழும்பு)

முகமாலை முன்னரங்கப் பகுதி மோதல்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கும் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா, விடுதலைப்புலிகளின் பலத்தைத் தாம் குறைத்து மதிப்பிடவில்லை எனக் கூறியுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## மலகூடக் குழியிலிருந்து இளம் பெண் சடலமாக மீட்பு

### சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் மலகூடக் குழி ஒன்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலத்தினை சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று மீட்கப்பட்ட இச் சடலம் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (ந-2,3,4)

## ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளேயின் படுகொலை பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டு தாரியுடன் முன்னர் தங்கியிருந்தார் என குற்றஞ்சாட்டி பல்கலைக்கழக மாணவர் ஒருவரை தெஹிவளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமது அடையாள அட்டையைக் காண்பிக்கத் தவறியதாக கடந்த வியாழக்கிழமை தெஹிவளையில் 37 பேர் கைது செய்யப்பட்டபோதே குறிப்பிட்ட மாணவரும் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. கைது செய்யப்பட்டவர்களில் 12 பேரை தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதுடன் மேலும் 18 பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு காரணமான தற்கொலை குண்டுத்தாரியின் உறவினர்கள் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் பல்கலைக் கழக மாணவரின் தெஹிவளை கௌடானா வீதியிலுள்ள வீட்டின் ஒரு பகுதியில் வாடகைக்கு இருந்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

### அமைதி வலயமாக பிரகடனப்படுத்தினால்

## மடு மாதாவின் சொரூபத்தை ஆலயத்தில் வைக்க முடியும்

### மன்னார் ஆயர் அறிவிப்பு

(மன்னார்)

'மடு மாதா தேவாலயப் பகுதியின் நிலைமையை நேரில் கண்டறிந்து வர குரு முதல்வர் ஒருவரை அனுப்பி வைத்திருப்பதாக மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராஜப்பு யோசப் அடிகளார் தெரிவித்தார்.

மடு மாதா தேவாலயப் பகுதியில் தாம் நிலை கொண்டிருப்பதாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தமக்கு அறிவித்திருப்பதாகவும் ஆயர் மேலும் தெரிவித்தார்.

மடு மாதா தேவாலயம் தொடர்பாக ஆயர் மேலும் கூறியதாவது, மடு மாதா தேவாலயப் பகுதியிலிருந்து புலிகள் வாபஸ் பெற்றுவிட்டனர். இதன் பின்னர் படையினர் அங்கு சென்றிருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது.

நிலைமையை (10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் பதிலடியால் ஆட்டம் கண்டிருக்கின்றது அரசு

## அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்



(கிளிநொச்சி)

சிங்கள அரசின் போர் நடவடிக்கைகளுக்கு வடபோர் முனையிலும் மன்னார் களமுனைகளிலும் தகுந்த பதிலடி வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பதிலடி சிங்கள அரசை ஆட்டம் காண வைத்துள்ளது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மாணவர்கள் மத்தியில் அவர் உரையாற்றியதாவது, அரசைப் பொறுத்தவரையில் இன்று எல்லோரையுமே போராளிகளாக எண்ணி வான் தாக்குதலை நடத்தி வருகின்றது.

அரசுக்கு, போராளிகளுக்கும் மக்களுக்குமிடையிலான வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. போராளிகளாக எண்ணித் தாக்குதலை ஒட்டுமொத்தமாகத் தமிழர்கள் மீது நடத்தும் அரசுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய நிலையில் உள்ளோம்.

விடுதலைப் போராட்டம் என்பது ஆயுதப் பயன்பாட்டில் மட்டும் தங்கியிருப்பதல்ல. மக்கள் என்ற மாபெரும் சக்தியிலேயே அது தங்கியுள்ளது. உலகில் மக்கள் ஆதரவு மிகுந்த விடுதலைப்போராட்டங்கள்தான் விடுதலை பெற்று நாடுகளை அமைத்துள்ளன.

நாமும் வல்லரசுகளின் துணையுடன் எமக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டிருக்கும் கொடிய சிங்கள அரசுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். சிங்கள அரசு இளைய தலைமுறையை அழித்துத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்க வேண்டும் என்பதில் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகின்றது.

அதன் வெளிப்பாடுகளாகவே பல முனைகளில் எம் மண் மீது வன்பறிப்புப் போரைத் தொடுத்துள்ளது. சிங்கள அரசின் கொடிய போரை, கைகளைக் கட்டிக் கொண்டு தமிழர் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சிங்கள தேசத்தில் தமிழர்களுக்கு எதிராகப் போரைத் தொடுப்பதற்குச் சிங்கள ஆசிரியர்களும் ஏன் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மடுத் தேவாலய சுற்றாடல் சகல மக்களினதும் வழிபாட்டுக்கு உகந்ததாக உருவாக்க வேண்டும்

## ஈ.பி.டி.பியினர் கோரிக்கை

(மன்னார்)

தொடரும் படைநகர்வின் மூலம் மடு மாதா தேவாலயத்தை புலிகளிடமிருந்து விடுவித்திருப்பதாக பாதுகாப்பு தரப்பினர் அறிவித்துள்ளனர்.

புனித தலமான மடு தேவாலயம் யுத்த சேதங்கள் எதுவுமின்றி மீட்கப்பட்டிருப்பது மக்களின் மகிழ்ச்சிக்குரியவிடயமாகும். இத்தகைய மக்களின் மன மகிழ்ச்சியில் நாமும் பங்கெடுக்கின்றோம். இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆராதனைக்குரிய வழிபாட்டு தலங்களை ஆயுதங்கள் ஆட்சி செய்ய முடியாது. அந்த வகையில் ஆயுதங்களோடு நடமாடிய புலிகளின் பிடியிலிருந்து மடுத் தேவாலயத்தை படையினர் மீட்டெடுத்திருப்பதோடு மட்டும் நின்று விடாமல் அங்கு அனைத்து மக்களினதும் சுதந்திரமான வழிபாட்டிற்குரிய சூழலையும் உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

தொடரும் படை நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் திருக்கேதீஸ்வர ஆலயம் படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றபோதிலும் அங்கு நடந்து முடிந்த உற்சவங்களில் அனைத்து மக்களும் கலந்து கொண்டு சுதந்திரமான வழிபாட்டில் ஈடுபடுவதற்கான சூழலையும் பாதுகாப்பையும் படையினர் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள்.

இது விரும்பி வரவேற்கத்தக்க விடயமாகும். இது போலவே படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருக்கும் வழிபாட்டு தலங்கள் தோறும் சுதந்திரமான வழிபாட்டிற்கு உகந்த சூழலை உருவாக்கியுள்ளனர்.

ஆகவே படையினரால் மீட்கப்பட்ட மடுத் தேவாலயத்தின் சூழலையும் மக்களின் சுதந்திரமான வழிபாட்டிற்குரியதான புனித பிரதேசமாக ஆக்குவதற்கும் வழிபடச் செல்லும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான கட்டாய கடமைகள் குறித்து கரிசனையோடு கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் செயலாளர் நாயகமும் அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா விரிவான கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

இதேவேளை மடுமாதா திருவுருவச்சிலையினை மக்களின் விருப்பங்களுக்கு மாறாக அங்கிருந்து அப்புறப்படுத்தி எடுத்துச்சென்றிருக்கிறார்கள்.

இது எமது மக்களின் ஆன்மிக உணர்வுகளை புண்படுத்தும் செயலாகும். மடுத் தேவாலயத்தில் மாதா திருவுருவச் சிலையினை மறுபடியும் ஆலயத்தில் வைப்பதே உரிய முறையாகும்.

கத்தோலிக்க ஆயர்கள் வண.பிதாக்கள் மட்டுமன்றி சர்வமதத் தலைர்களும் மனிதநேய அமைப்புக்களும் மதஸ்தாபனங்களும் இது குறித்த அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

சகல மக்களும் விரும்பும் ஆன்மிக வெளிச்சங்களை திரைபோட்டு மறைக்கும் தடைகளை அகற்றி எமது மக்களின் ஆன்மிக உணர்வுகளுக்கு மரியாதை அளிக்க வேண்டுமென நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இளைஞர் ஒருவர் மன்னாரில் சுட்டுக்கொலை

(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் பகுதியில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். உப்புக்குளம் இராஜ இராஜேஸ்வரி கோவில் பகுதியில் வைத்தே இந்த இளைஞன் நேற்றுமாலை 4.20 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சடலத்தில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. சடலம் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. படையினரும் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (ந-5)

## ரயிலில் பொதி பயணிகள் பரபரப்பு

(கொழும்பு)

மதவாச்சியிலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை நேற்று முற்பகல் வந்தடைந்த ரயிலில் அநாதவரான நிலையில் கிடந்த பொதியொன்றினால் கோட்டை ரயில் நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து கோட்டை ரயில் நிலையத்தை நோக்கி வந்த அனைத்து ரயில்களும் இடையில் நிறுத்தப்பட்டன. பின்னர் குண்டு செயலிழக்கும் படையினர் பொதியை சோதித்தபோது அது துணிகள் அடங்கிய பொதி என தெரியவந்தது. (ந-5)

## யாழ்.துரையப்பா அரங்கு மாநகர ஆணையாளரிடம் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு நேற்று இராணுவத்தினரால் மாநகர சபை ஆணையாளரிடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் யாழ்.மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் யாழ்.செயலக உயர் அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதனையொட்டி கலைநிகழ்வுகள், உதைபந்தாட்டப் போட்டிகள் என்பன இடம்பெற்றன.

இதேவேளை கடந்த 3 ஆண்டுகளாக இம் மைதானம் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## பிலியந்தலயில் இறந்தோர் இருபத்தாறாக உயர்வு

### 22 பேர் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

பிலியந்தல பஸ் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களில் இருபத்திரண்டு பேரின் சடலங்கள் நேற்று மாலை வரை அடையாளம் காணப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருபத்தாறாக உயர்ந்துள்ளது.

காயமடைந்த எழுபத்தி நான்கு பேரில் 63 பேர் தொடர்ந்தும் களுபோவில தெற்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏழு பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் நான்கு பேர் கெஸ்பாவ வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குண்டு வெடித்த இடத்தில் இருந்த பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இக்குண்டு வெடிப்பு தொடர்பாக ஒன்பது பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை இக்குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

## தந்தை செல்வா நினைவு ஈ.பி.டி.பி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களின் 31 ஆவது நினைவு தினத்தையொட்டி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தலைமையில் அவ



ரது திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா சதுக்கத்தில் உள்ள தந்தை செல்வாவின் நினைவுத்தூபியில் நேற்றுக்காலை 7.00 மணியளவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் யூட் (உதயன்), வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பூ.குணசிங்கம், வேலணை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் சூ.அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) மற்றும் ஈ.பி.டி.பி கட்சியின் முக்கியஸ்தர்களான க.வதிமகன், பாரதி, ரவீந்திரன், நேரு, பில்லா மற்றும் ஈ.பி.டி.பி.யின் மகளிர் அணியினர் எனப் பலரும் இவ்வஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டதாக யாழ்.ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வா அவர்களின் திருவுருவச் சிலைக்கு உதயன் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து மெழுகுதிரி ஏற்றப்பட்டு, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ந)

## மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

## பின்னுறுதித் தீர்வை.

எட்னா கனகேஸ்வரி பாலச்சந்திரன்,
251, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழக்கு இல.:-
மணநீக்கம்/831

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன்,
'எல்வின்' காங்கேசன்துறை வீதி,
இணுவில்,
யாழ்ப்பாணம்.

எதிராளி

இவ்வழக்கு 2008ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.கனகரத்தினம் நிறுவனத்தினரும் மன்றில் சமுகமாயிருக்க 14.03.2008ம் திகதிய கட்டளைக்கமைய அழைப்புக்கட்டளைஎதிராளிக்கு வலம்புரிப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டு பதில் சேவகம் செய்யப்பட்டு, எதிராளி இன்று மன்றில் சமுக மின்மையால் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டு வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி, மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர்,

வழக்காளியின் பிராது, வ 1 ஆவ்ணம், வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் என்பவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து, வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1974ம் ஆண்டு ஆடி மாதம் 15ம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்று வழக்காளியை விட்டுப் பிரிந்து சென்று வன்ம உறவறுப்புச் செய்த காரணத்தினால் இரத்துச்செய்து வெற்றும் வெறுதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

மேலும இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதியை 'வலம்புரி' தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்டு, செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் குறித்த பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படும் எனவும் கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி

வரைபு
வழக்காளியின் சட்டத்தரணி

**ஒப்பம்**
**இ.த.விக்னராஜா**
**மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.**

**நீதிமன்றக் கட்டளைப்படி**
**து.சிறீமோகன்**
**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

(1119)

## யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் பொதுக் கூட்டம், 04.05.2008 ஞாயிறு தினம்,காலை 10 மணிக்கு சங்க பணிமனையில் (61, ஈச்சமோட்டை ) நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதினால், சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கோரப்படுகின்றனர்.

கப்ரின் D.A.M குணசிங்கம் 'J.P'
(தலைவர் யா.உ.ம.சங்கம்)
(110)

(C-1062)

# எண் சோதிடம்

## எண் -8 (சனி)

(சென்றவாரத் தொடர்ச்சி)

53. இவ்வெண்ணால் குறிக்கப் பெறுவோர் ஆரம்பத்திலேயே வெற்றி தோல்விகளை அனுபவிப்பார்கள். வயது ஆக ஆகத்தான் நிதானம் ஏற்படும். பிரபலமான வாழ்க்கை ஏற்படும். அறிவாளியாக இருந்தபோதிலும் இவர்களது அறிவிற்கு மிஞ்சின சிக்கல்களில் அகப்படுவார்கள். தோல்வியை வெற்றியாக்கிக் கொள்ளும் திறனுடைய இவர்கள் நன்மைக்கான காரியங்களைச் செய்து புகழடைவர். (இது ஒரு நிச்சயமில்லாத எண்ணிக்கை. பிறந்த தேதி எண்கள் நன்றாக இருந்தால் தான் நன்மை உண்டாகும்) விருத்தாப்பியத்தில் யோகமுண்டு.

62. இவ்வெண் மிகுந்த புகழையும், பெரும் வெற்றிகளையும், சுகவாழ்க்கையையும் தரும். பேராபத்துக்களும் தோல்வியும் இடையிடையே காணப்படும். பெருத்த விரோதங்களையும், உறவினரிடையே மனக் கசப்பையும் உண்டு பண்ணக் கூடியது. குடும்பவாழ்கையில் சுகம் இராது. மூளை மிகுந்த பலம் பெறும். பிறர் ஏமாந்து போகக்கூடிய அளவு வசீகரமுண்டாகும். விரோதிகள் கூட மயங்கி விடுவார்கள்.

71. இவ்வெண் வாழ்க்கையின் ஆரம்பத்தில் பல விதத் தடங்கல்களை ஏற்படுத்தினாலும் பின்னர் வெற்றியையும் செல்வத்தையும் தரும். பலருக்குப் புத்தி சொல்லும் அறிவாளியாவார். அதிர்ஷ்டகரமானதாகக் கருதலாம்.

80. இவ்வெண் மிகவும் சூசகமான சக்திகளையுடையது, வாழ்க்கையை பெருத்த ஆபத்துக்களை முடித்துவிடக் கூடும் (பிறந்த திகதி எண்கள் நன்றாக இராவிடில்). தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபடுபவர்களானால் தத்துவங்களையெல்லாம் வெல்லக் கூடிய சக்தி ஏற்படும். இயற்கை இவர்களுக்குதன் தன்மைகளையும் மாற்றிக்கொண்டு உதவும். வாழ்க்கையோ ஆபத்துக்களால் சூழப்பட்டு பயம் நிறைந்து இருந்தபோதிலும் சுகமாக நடைபெறும். அற்புதங்கள் நிறைந்த வாழ்க்கை அமையும். அதிர்ஷ்டகரமானதாகக் கருதலாம்.

89. நற்பலன்களைக் குறிக்கும் இவ்வெண்ணும் வாழ்க்கையின் ஆரம்பத்தில் சிரமங்களைத் தரும். பரோபகார சிந்தை மிகும். ஏராளமான சொத்துக்கள் சேரும். பூமி, வீடுகள், ஆபரணங்கள் நிறைய உண்டாகும். ஸ்திரீகள் மிகவும் இவர்களை விரும்புவார்கள். (புருஷர்களானால்) ஸ்திரீகளானால் தன் இனத்தாரால் மிகவும் மதிக்கப்படுவார்கள். அழகும் ஐஸ்வர்யமும் சேர்ந்துகாணப்படும். தீவிரமான சொல்லும் செயலும் உண்டு. பயமற்ற வாழ்க்கை உண்டாகும். ஆரம்பத்தில் நெருப்பால் ஆபத்துக்கள் ஏற்படலாம்.

98, 71 எண்ணால் குறிக்கப்படுபவர் போலவே இவ்வெண்ணால் குறிக்கப்பெறுவோரும் அறிவாளியாக இருப்பார். கவலைகள் நிறைந்த வாழ்க்கையும் ஏக்கமும் ஏற்படும். அறிவு இருந்தும் பிரகாசம் ஏற்படாது. கஷ்டங்களும் தீராத நோய்களும் உண்டாகும்.

107. இவ்வெண் பிரசித்தியையும் வெற்றியையும் தரும். ஸ்திரீகளால் சிக்கல்கள் ஏற்படும். (ஸ்திரீகளானால் புருஷர்களால் சிரமங்கள் உண்டாகும்). செல்வம் ஏற்பட்டாலும் சுகம் கிடைக்காது. கீர்த்தி உண்டு. செல்வாக்கு ஏற்படும்.

### அதிர்ஷ்டகாலம்

8,17,26 திகதிகளில் பிறந்தவர்கள் பெயரைக் கூட்டு எண்ணுக்கு பொருத்தமான படி அமைத்துக்கொண்டு அந்த எண்ணிற்கான அதிர்ஷ்ட தினங்களிலேயே எல்லாக் காரியங்களையும் செய்து வருதல் நலம். அப்படிச் செய்வதால் மற்ற எண்ணின் பலம் வளர வளர சனியின் ஆதிக்கம் குறையும். மற்றப்படி இவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 1,10, 19,28 திகதிகளும், திகதி, மாதம், வருஷம் கூட்டினால் 1வரும் தினங்களுமாகும். 4,13, 22,31 திகதிகள் சாதகமான பலன்களைத் தரும். (எதிர்பாராத மாறுதல்கள் நிகழ்ச்சிகள் 4 எண்ணின் ஆதிக்கத்தால் ஏற்படும்) 9,18,27 திகதிகளும் நன்மை தருவனவாகும். ஊக்கத்தைக் கொடுக்கும் 9 எண்ணின் ஆதிக்கம் இவர்களுக்கு நன்மையே புரியும்.

**துரதிர்ஷ்ட தினங்கள்:** 8,17,26 திகதிகள் வீண்விவகாரங்களின் ஈடுபடுத்தி தீமைகளை விளைவிக்கும். பிரயாணம் முதலியவைகளை இத் தினங்களில் மேற்கொண்டால் நோயும், தோல்வியும் தொடரும். திகதி, மாதம், வருஷம் கூட்டினால் எட்டு வரும் தினங்களும் நன்மையானவை அல்ல.

**வர்ணம்:** மஞ்சள் நிறமே இவர்களுக்கு சோபை அளிக்கக்கூடியது. ஆழ்ந்தபச்சையும் நீலமும் நன்மைதரக்கூடியன. தனித்திருக்கும்போதுதான் நீலம் அணியலாம். மற்றவர்களுடன் பழகும்போது மஞ்சளே உபயோகிக்கவும்.

**அணியக்கூடாதவை:** கறுப்பு பாக்கு கலர், மற்ற மங்கலமான ஆழ்ந்த வர்ணங்கள் சிவப்பு இவைகள் சிறிதும் பொருந்தாது.

**இரத்தினம்:** குற்றமற்ற இலக்கணங்கள் பொருந்திய நீலக்கல் அணிந்தால் நல்ல அதிர்ஷ்டமுண்டாகும். ஆறு நூல்களுடைய நீலக்கற்கள் இவர்களுக்கு மிகவும் பொருத்தமானவை. (17ஆம்திகதி பிறந்தவர்களுக்கு ரொம்பவும் அதிர்ஷ்டமளிக்கக் கூடியது). செல்வந்தர்களானால் கிடைத்தால் இந்திர நீலம் அணியலாம். தேவியின் நிறத்தையும் அழகையும் வர்ணிக்க உபயோகப்படும் இவ் இந்திர நீலங்கள் தற்காலத்தில் கிடைத்தற்கரியனவாகின்றன. இனி 8ஐக் குறிக்கிற எழுத்துக்களையும் அவைகளின் பலன்களையும் கவனிப்போம் (முதல் எழுத்தாக வந்தால் பலம் அதிகம்).

## பண்டிட் ஸேதுராமன்



**F.** இவ் எழுத்து பெயரில் வந்தால் துணிந்து தாக்கும் சுபாவம் உண்டாகும். தன் காரியத்தையே சாதிக்கவும் தன் அபிப்பிராயங்களையே பிறர் மீது திணிக்கவும் திறமை ஏற்படும். விடாப்பிடிவாதமும் நிர்வாகத் திறமையும் ஏற்படும். நண்பர்களிடம் நீங்காத விசுவாசம் கொண்டவராவார். நிச்சயமான அபிப்பிராயங்களே உடையவர்கள் அதிகம் பேசாமல் காரியத்திலேயே கண்ணாயிருப்பார்கள்.

தோல்வி நேர்ந்தால் உடனேதான் தோற்கவில்லை என்று காட்டிக்கொண்டு விடுவார்கள். வெற்றியில் மாறாத நம்பிக்கை உடைய இவர்களுக்கு சரீரபலமும் மனோபலமும் உணர்ச்சிகளும் ஒருக்காலும் குறையாது. திட சரீரியாக நீடித்துவாழ்வார். இதன் வர்ணம் கறுப்பு. ஆனால் இதில் அடிக்கடி தோன்றிக் கொண்டே இருக்கும் மஞ்சள் நிற ஒளியே திருவருளையும் நம்பிக்கையையும் குறிக்கிற சப்தம் என்பதை விளக்குகிறது.

**B.** பளபளப்பான கருநிறம் கொண்ட இவ் எழுத்து வேதாந்தத்தினையும் பெருங்கொடையாளியையும் குறிக்கிறது. அளவிலா ரசிகத்தனமும் செலவும் உண்டு. இவருக்கு முன்னேற்றமும் புகழும் பேச்சினாலேயே ஏற்படும். (வாயால் என்று கூறப்படுவதால் பாட்டையும் குறிக்கும்) பேச்சும் பிரமாதமாக இருக்கும். பேச்சில் காணப்படும் உணர்ச்சி கேட்போருக்கு இவரது கருத்துக்களை புலப்படுத்தும். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளிஉண்டாம்" என்ற பாரதியார் வாக்கு இவருக்கே பொருந்தும். சுயமான கற்பனை கள் மனதில் தோன்றும் ; கவர்ச்சி மிக்க தோற்றமும் இவ் எழுத்து பெயரில் வருவதால் உண்டாகும். நிர்வாக சக்தியும் அதிகரிக்கும். "ப-காரம் பயம் நாஸ்தி' என்று காளிதாச மகாகவி கூறியது முற்றிலும் பயம் இன்னதென்று அறியாத இவர்கட்கே பொருந்தும். அதிகமாக கோபங்களில் ஈடுபட்டால் ஜீவசக்தி குறைவதால் நோயுற நேரும்.

**பெயர்மாற்றிக்கொள்ள:** பிறந்ததிகதி எட்டு எண் வருவதாக இருந்தால் கூட்டு எண்ணிற்கு சாதகமான பெயரை வைத்துக் கொள்ளலாம். இரண்டும் எட்டாகவே இருந்தால் ஐந்து எண் வருகிற பெயரை வைத்துக்கொண்டால் பிடித்த சனீஸ்வரர் விலகுவார் வாழ்க்கையில் வெற்றி ஏற்படும். இனிஎட்டாம் திகதிகளில் பிறந்த சில பிரமுகர்களைக் கவனிப்போம்.

| பெயர் | பிறந்ததிகதி | எண்கள் |
|---|---|---|
| (ஸ்வாமி சிவானந்தா) | 8.9.1887 | 8&5 |
| ஜியார்ஜீ மெலாங்கோவ்- | 8.1.1902 | 8&3 |
| (சீக்கிரமே பதவியை இழந்த ரஷ்ய பிரதமர்) | | |
| ஜோர்ஜ்பெர்னாட்ஷா | 26.7.1856 | 8&8 |
| ஸர்பெனிகல்நரஸிங்கராவ் | 26.2.1887 | 8&7 |

(தொடரும்)

# சித்தர்கள் கூறும் நாடி பற்றிய சில சிந்தனைகள்

நாடி என்று கூறும்போது மனித உடலில் இயங்குகின்ற குருதி நாடித்துடிப்பையே (Pulse) குறிக்கின்றது. சித்தர்கள் கூறும் நாடி பற்றி தத்துவக் கருத்துக்களை இங்கு நோக்கலாம்.

உயிரினங்களுக்கெல்லாம் அறிகுறியாக அவற்றின் சலனம் இன்றியமையாததாக இருக்கின்றது. உயிரினங்களும் சலனம் இல்லையேல் உடலில் உயிர் உறங்கிக் கிடக்கின்றது என்பது விளக்கமாகும். எப்பொருளிலும் உயிர் உண்டு. ஆனால் இருக்கும் நிலையில்தான் வேறுபட்டது என அறியப்படும்.

பொதுவாக உயிர் ஐந்து நிலையில் இயங்குவதாக சித்தர்கள் விளக்கியுள்ளனர்.

1. சாக்கிரம்-நனவுநிலை.
2. கனவு -மயக்கநிலை
3. உறக்கம் -ஒடுக்கம், புலன்களில் செயலற்று உறங்குதல்.
4. துரியம்-யோகநிலையில் உயிர் உறங்குதல்
5. துரியாதீதம் - உடல் உயிர்மயமாதல்

மேற்குறிப்பிட்ட ஐந்து நிலையைத் திருமூலர்,

"ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னான்கிற் கண்டங்கனா வென்பர்
பொய்க் கண்டிலாத புருடனிதயஞ் சுழுமுனை
மெய்கண்ட வன்னூதி யாருந் துரியமே"

என்கிறார். பொதுவாகச் சாக்கிரம், கனவு என்னும் இரு நிலையில் உயிர் சலன முறும் போது உடல் வாழ்கின்றது என்கிறோம். உறக்கம் அல்லது ஒடுக்கநிலையில் மரணம் அல்லது உடலிலிருந்து உயிர் ஏகிவிட்டது என்கிறோம். இது ஒரு சாதாரண மனிதனில் நடக்கும் செயற்பாடாகும்.

பண்டைய காலத்தில் சித்தர்கள் தமது உடலில் இருக்கும் படியான உயிரை உறக்க அவத்தை அடையவிடாமல் துரியம், துரியாதீதம் என்ற அவத்தைகளுக்கு மேலும் உயிரை உட்படுத்தி உடலை உயிர் மயமாகிச் சிவத்தை அடையச் செய்தார்கள். அந் நிலையிற்தான் உருவப் பொருளாகிய சடம் உயிராக மாறுகிறது.

ஆகையால் துரியம், துரியாதீதம் ஆகிய நிலைகளில் உயிர் சலனம் அடையும் போது உடல் உயிர்மயமாகி அருவமாகிறது எனலாம். இந்நிலையே முத்திநிலை என்றும் கூறலாம். இதனைச் சைவசித்தாந்தம் "சீவன் சிவமயமாதல்" என விளக்கும்.

ஆகவே உயிரினங்களின் உடலில் உயிரானது சாக்கரம், கனவு, உறக்கம் என்ற அவத்தைகளோடு இயங்குகிறதா? அல்லது உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டதா? என்று நாடிப் பார்ப்பதுதான் 'நாடி' என அறியப்பட்டது. சுருங்கக் கூறின் உயிரின் அல்லது ஆன்மாவின் (ஜீவாத்மா) சலனம்தான் நாடி என்பது மெய்யியல் கருத்தாகவும் உள்ளது.

இவ்வாறு சலனத்தோடு இயங்கும் உயிரானது தொண்ணூற்றாறு தத்துவங்களுடன் ஒழுங்காக இயங்கி வருகையில் சாக்கிர நிலை எனப்படும். கனவு நிலையை விட்டு ஒடுங்க ஆரம்பிக்கும் நிலையே 'நோய்' எனப்படும். ஆகவே உயிரானது என்ன நிலையில் சுக போகிக்கும், நோயாளிக்கும் இருக்கிறது என்பதை ஆராய்வதுதான் 'நாடி' என மருத்துவ சாஸ்திரங்கள் கூறுகின்றன.

உறக்கநிலையினை உயிர் அடைந்துவிட்டால் உடல் அழிந்துவிடும். அந்த நிலையை அடையவொட்டாமல் யோக நெறி மூலம் துரியம், துரியாதீதம் நிலைகளில் உயிரைச் சலனப்படுத்தி உடலை உயிர்மயமாக்குவதே "சித்தர்கள் நெறி" ஆகும். உடலென்பது சொல்லும், உயிர் என்பது கண்ணுக்குப் புலனாகும் வடிவம்(பொருள்). இதனை Matter என்னும் ஆங்கில அறிவியல் சொல்லாலும், உயிர் என்பது கண்ணுக்குப் புலனாகாத சக்தி -இதனை Energy என்னும் அறிவியல் சொல்லாலும் குறிக்கலாம்.

சாக்கிர நிலையிலும், கனவு நிலையிலும் உயிர் இயங்கும்போது Matter உருவாகின்றது. உறக்க நிலையில் உடல் அழிந்து உயிர் ஒடுங்குகின்றது. துரியம், துரியாதீதம் நிலையில் உடல் (Matter) அருவமாகி உயிருடன் (Energy) இணைந்துவிடுகின்றது. உடலை உயிர் மயமாக்குவதே சித்தர் நெறி ஆகும்.

சாதாரணமாக யோகநெறி அறியாதவர்களுக்கு உயிரின் சலனம் உறக்கநிலையோடு முடிவடைகின்றது. யோகிகட்கு துரியம், துரியாதீதம் நிலைகளை அடையமுடியும். துரியநிலை சென்றடைந்தவர்களுக்கு நோய் போன்ற துன்பங்கள் வருத்தினாலும் அது தெரிவதில்லை. அடுத்து துரியாதீத நிலையில் உடல் உயிர் மயமாகின்றது.

Dr. பொன். இராமநாதன் M.D(S), Ph.D.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

மேற்கூறிய காரணங்களாலே உயிர் மயமான யோகியின் உடலை அக்கினியில் எரிக்காமல் சமாதியில் வைக்கிறார்கள். அவர்களின் உயிர் அங்கு சலனமடைந்த வண்ணம் அருள்பாலித்துக்கொண்டு ஆலயமாக விளங்குவதே இது உணர்த்தும் தத்துவக் கருத்தாகும்.







உரும்பிராய் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவுக்கு கனடாவில் வசிக்கும் விக்னேஸ்வரன் அனுஷியா தம்பதிகள் தமது சொந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர். டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் தலைமையில் கடந்த 1ஆம் திகதி நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனிடம் செல்வி பேராயிவர் ரோகினி காணிக்கான உரிமத்தை வழங்குவதையும், அருகில் டாக்டர் யாழினி யோகேஸ்வரன் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும், விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



# காரை நகர் ஈழத்துச் சிதம்...
# அருள்மிகு சிவகாம சுந்தரி ச...
# பிரதிஷ்டை செய்யப்பட்ட 100 ஆண்டுகள்...

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் திண்ணபுரத்துச் சிவனாலயத்தில் சிவகாமி சுந்தரி நடராஜப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து நுறு ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி நாளைய தினம் சிறப்புற நடைபெறும் சகஸ்ர கலச சங்காபிஷேகப் பெருவிழாவிற்கு ஆசி வழங்குவது பெரும் பேறாகும். நூறு ஆண்டுகளின் நிறைவென்பது வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வாகும்.

அதிலும் சிவகாமி சுந்தரி சமேத நடராஜப் பெருமானை திண்ண புரத்தில் பிரதிஷ்டை செய்து நூறு ஆண்டு பூர்த்தியாகியிருப்பதும் அன்றைய தினம் நடைபெறும் பூசை வழிபாடுகளைக் கண் குளிரக் காண்பதும் புண்ணியம் செய்தார் பெறும் பேறாகும்.

அந்த நன்னாளில் ஈழத்துச் சிதம்பர சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமானின் திவ்விய கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கஅவன் தாள் வணங்கி சகஸ்ர கலச சங்காபிஷேகம் சிறப்புற நடைபெற ஆசிகூறுகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

*நல்லை ஆதீனம் நல்லூர்*
*ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆதீன முதல்வர்*

## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனை உரை



ஈழத் திருநாட்டில் வாழும் சைவமக்களின் புனித திருத்தலங்களில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தனித்துவம் மிக்க சிறப்புத் தலமாக விளங்குகிறது. இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு நூற்றாண்டு நிறைவு விழாக் காண்பது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். நிறைசெல்வம் நித்திலம் அள்ளிக் கொடுக்கும் அம்பலவாணனின் அற்புதங்களை காரைநகர் மக்கள் மட்டுமன்றி பலவூர் மக்களும் பெருமையோடு எடுத்துரைப்பர் . இந்தியாவில் சிதம்பரத்தில் நடைபெறும் அபிஷேகம் போல் ஈழத்தில் பல மணி நேரம் பல்வேறு திரவியங்களால் இப் பெருமானுக்கு நடைபெறும் அபிஷேகச் சிறப்பைக் கண்டு போற்றாதவர்கள் இல்லை. நூறு ஆண்டுகள் பல லட்சம் அபிஷேக மழையில் நனைந்து அடியார்களை அருள் மழையில் குளிர வைத்த திருவருட் சக்தி மிக்க சிவகாமி அம்பாள் சமேத நடராஜப்பெருமான் எம் மண்ணையும் மக்களையும் காத்தருள இந்நாளில் அனைவரும் ஒன்று பட்டும் பிராத்திப்போம். இத் திருத்தலத்து சிற்சபை முன்றலில் எத்தனை ஆயிரம் அடியவர்கள் சந்ததி சந்ததியாக ஆருத்திரா தரிசனம் கண்டு இன்புற்றனர். இவை மட்டுமன்றி காரை மணிவாசகர் சபையின் மாநாட்டு மண்டபமாக நடராஜன் முன் அரங்கம் திகழ்ந்ததை மறக்க முடியாது. எல்லாம் வல்ல காரை தில்லைக் கூத்தன் அனைவரையும் அரவணைத்துக் காப்பானாக .

*ஆறு திருமுருகன்.*

## கூத்தப்பிரானை வழிபட்டு உய்திபெறுவோம்

காரைநகர் சைவ ஆலயங்கள் அறுவதை தன்னகத்தே கொண்ட தெய்வத் தன்மை பொருந்திய ஒரு புனித இடமாகும். இந்த ஆலயங்கள் அனைத்திற்கும் இருதயம் போல விளங்குவது இங்குள்ள சிவன் ஆலயம் . இங்கு ஆலயக் கிரியைகள் யாவும் தமிழகத்தில் உள்ள சிதம்பரத்தைப் பின்பற்றியே நடைபெற்று வருகின்றன.



எனவே ஆலயம் அமைந்துள்ள தலம் ஈழத்துச் சிதம்பரம் என்றும் சிறப்புப் பெயரை பெறலாயிற்று. ஈழத்துச் சிதம்பரத்தில் உள்ள நடராசமூர்த்தியின் திருவுருவம் மிகமிக அற்புதமானது. பதஞ்சலி, வியாக்கிரமபாதர் என்றும் முனிவர்களுடன் கூடியது. இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடராஜர் அம்பிகை சமேதராக அமைந்திருக்கும் பாவனையில் உள்ள திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தலத்தில் மாத்திரமே உண்டென கோயில் வரலாற்றிலும் மூர்த்தி அமைப்பு முறையிலும் நிரம்பிய அறிவுள்ள இந்தியப் பேரறிஞராகிய திரு.தொ.மு.பாஸ்கரன் தொண்டமான் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வந்து நடராஜப் பெருமானைத் தரிசித்த போது கூறியமை நினைவு கூறத்தக்கது. இத்தகையசிறப்பு வாய்ந்த நடராஜப் பெருமானுக்கு நடைபெறுகின்ற மார்கழி திருவாதிரை உற்சவத்தையும் ஆருத்திரா அபிஷேகத்தையும் ஏராளமான மக்கள் தரிசித்து அவனருளைப் பெருகின்றனர். மார்கழி திருவாதிரையைப் போலச் சித்திரை திருவோணமும் ஆனிஉத்தரமும் ஆவணி புரட்டாதி மாசி மாதங்களில் பூரணையை அடுத்து வரும் சதுர்த்தசியும் கூத்தப்பிரானுக்கு அபிஷேக நாள்களாக உள்ளன. இந்நாள்களில் இந்திருத்தலத்தில் கூத்தப்பெருமானுக்கு விஷேட அபிஷேகங்கள் செய்வார்கள்.

இந்த ஈழத்துச் சிதம்பரத்தில் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவில் நாளை திங்கட்கிழமை பஞ்ச குண்டபட்ச அஷ்டோத்தர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகமும் பஞ்சமுகா அர்ச்சனையும் சிறப்புற நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு வலம்புரி நாளிதழில் விஷேட மலர் ஒன்று வெளிவருகின்றமை பாராட்டுக்குரியது. இந்த மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் நாமெல்லாம் ஈழத்துச் சிதம்பரத்திற்குச் சென்று கூத்தப்பிரானை கும்பிட்டு அப்பெருமான் அள்ளி வழங்குகின்ற செல்வத்தைப் பெற்று உய்வோமாக.

*ஈழத்துச்சிதம்பரம்*
*காரைநகர்*

*கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்.*


## அனைவருக்கும் செளபாக்கியம் கிடைக்கட்டும்!



ஈழ மணித்திரு நாட்டின் கண்ணே கலையும், கலாசாரமும், திருவும் திரவியங்களும், அறிவும் ஆன்மீகமும் பொலியும் புனித பூமியாகத் திகழ்வது காரைநகர் எனலாம். இக் காரை நகரின் உயிர் நாடியாக இயங்கிக் கொண்டிருப்பது "ஞானத் தேன் பொந்தாய்" விளங்கும் ஈழத்துச் சிதம்பரம் எனும் பதி என்றால் மிகையில்லை. இப்பதியில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு நாளை 28.04.2008 நடைபெற இருப்பது எமக்கெல்லாம் மகிழ்வும் உவகையும் தரும் செய்தியாக இருக்கிறது. ஆம் இந்தியாவில் சிதம்பரத்திலே திருநடனம் புரியும் நடராஜப் பெருமானின் திருவுருவை ஒத்த நடரா ஜரின் திருச்சிலை இப்பதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டு நூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதன் பொருட்டு விசேட பூசை வழிபாடுகளும் 1008 கலச அபிஷேகமும் நடைபெற இருக்கின்றன. இவ் நிகழ்வுகள் யாவும் சிறப்புற நிகழ இறையருளாசியை இறைஞ்சி அனைவருக்கும் அமைதியும் அனைத்து செளபாக்கியங்களும் கிடைக்க செளந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானை வணங்கிப் பணிகின்றேன்.

*இ.த.ஜெயசீலன்*
*உதவி அரசாங்க அதிபர்*
*காரைநகர்.*

*உதவி அரச அதிபர் பணிமனை*
*காரைநகர்*



## ஈழத்துச் சிதம்பரத்தானிற்...

இலங்கையில் உள்ள பழம் பெரும் ஆலயங்கள் காரைநகர் ...மும் ஒன்றாகும். மூர்த்தி , தலம், தீர்த்தம் ஆகிய ஸ்தல சிறப... பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளை... இத் தலத்திற்கு ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெயரும் வழ...

இற்றைக்கு பல ஆண்டுகளிற்கு முற்பட்ட பழமை பொரு... கோவிலைக் கட்டி வழிபடும் போது தில்லை நடராஜப் பெரு... ஆனியிலும் மார்கழியிலும் சிதம்பரத்தில் நிகழும் திருமஞ்சன ... என்றும் பூசை முறைகளையும் சிதம்பரத்தைப் போலவே செ... புறத்திலும் காணவிரும்பியதால் இற்றைக்கு நூறு ஆண்டுக... நடராஜப்பெருமான் பிர திஷ்டை செய்யப்பட்டார்

சிதம்பரத்தில் உள்ளது போன்று நடராஜர் உருவம் அமை... உருவத்தைச் சுற்றி அமைந் திருப்பதாலும் இவ் ஆலயம் ஈழத்... வித்தகராகிய' அதாவது ஐந்தொழில் நடனத்தை விளையாட்... மிக்கவரான நடராஜப் பெருமானது திருவுருவம் 1908ஆம் ... செய்யப்பட்டதில் இருந்து வருடாந்தம் ஆறு அபிஷேகம் சிற...

'சீரணையு மாசி புரட்டாதி சிங்கத் திங்கள் ...
பூரணையை யடுக்கின்ற சதுர்த்தசியில் புகழா...
ஒரணையு மிள வேணிற் சித்திரையி யேன்ற ...
நீரணையு நெடுவேணில் கூத்தருக்குத்திருமுழு...

ஈழத்துச் சிதம்பர புராணம் அதாவது மார்கழி திருவாதி... ணையை அடுத்துவரும் சதுர்த்தசியிலும் புகழ் பூத்த ஆனி உத்... திருவோணத் திலுமாக விசேடமாக ஆறு அபிஷேகம் நடை...

சிறந்த முறையில் திரு முழுக்காற்றும் போது அதாவது ... லிய பொருட்களாலே திரு முழுக்காற்றும் போது இவ்வுல... பெரும் புண்ணியப் பயனையும் தரும் என்று சைவாகமங்க...

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் ...
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் ...
இனித்த முடைய வெடுத்த பொற் பாதமும்...
மனித்தப் பிறவியும் வேண்டுவ தே...ந்த மா...

என்ற அப்பர் பெருமானின் பதிகத்திற்கு அமைய நாம் அ... பாள் சமேதர நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு ... நடைபெறவுள்ள பஞ்ச குண்ட பட்ச அஷ்டோத்தர சகஸ்ர (1008... களே! அனைவரும் புண்ணியப்பேறு பெற்றவர்களே இவர்கள்... அனைவரும் கூத்தப்பிரணை வழிபட்டு சிவப்பேறு அடைவே...

*ப. ...*

அனைத்து வகையான
ஆடைகளுக்கும் நாடவேண்டிய
ஒரே இடம்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
105, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.
(C/1067)

சைக்கிள் ,சைக்கிள் உதிரிப் பாகங்கள்
மற்றும் கண்ணைக் கவரும் சிறுவர்
களுக்கான சைக்கிள்கள் அனைத்தையும்
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய
நாடவேண்டிய இடம்
ஈஸ்வரன் ரேடர்ஸ்
69,கஸ்தூரி யார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021- 222 2813 (C/1069)

சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
றூபா பன்முக வர்த்தகம்
இல. 104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 2479
(C/1068)

கணே...
அனைத்து...
பா...
றுக்கொ...
T.P. 021 ...

உலகின் எந்தப்பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்
மற்றும் உள்ளூர்,வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகள்,லெமனேற்றிங்,பிறின்ரிங்,கிறபிக்ஸ் டிசைனிங்,
கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
Processor
Fan
VGA Card
விரைவான பணப் பரிமாற்றத்திற்கு
WESTERN UNION
பணப் பரிமாற்றம்
சகல விதமான
SLT MAXtalk
SLT NetCard
Internet Browsing
சேவையைப் பெற்றுக்கொள்ளவும்
வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம்
கணனி சம்பந்தமான சகல பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
Warranty 1 & 3 Years With Servise
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
FedEx Express
நம்பகரமான
துரிதசேவை
(C/1064)

PEPSI யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்
கஜமுகன்
ஹாட் வெயார்ஸ்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2833, 222 7182, 222 7144
(C/1063)

# சிறிசாந்தின் கன்னத்தில் அறைந்தார் எதிர் அணித் தலைவர் ஹர்பஜன் சிங்

(மொகாலி)

ஐ.பி.எல் இருபது -20 கிரிக்கெட் தொடரில் மொகாலியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் யுவராஜ் சிங் தலைமையிலான பஞ்சாப் அணி 66 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸ் அணியை தோற்கடித்தது.

இது பஞ்சாப் பெற்ற முதல் வெற்றியாகும். அதே நேரத்தில் மும்பை அணி தொடர்ந்து மூன்றாவது தோல்வியை சந்தித்தது.

வெற்றியை பஞ்சாப் அணி வீரர்கள் கொண்டாடினார்கள். அப்போது அந்த அணிவீரர் சிறிசாந் மட்டும் கண்ணீர் விட்டு கதறியழுதார்.

இது தொலைக்காட்சியில் தெரிந்தது. அவர் எதற்காக அழுதார் என்பது புரியவில்லை. அவரை மும்பை இந்தியன்ஸ் அணியின் தற்காலிக அணித்தலைவர் ஹர்பஜன்சிங் கன்னத்தில் அறைந்துள்ளார்.

இதற்காகத்தான் சிறிசாந் அழுதார் என்பது பின்னர் தெரிந்தது. அவரை பஞ்சாப் அணியின் நடிகை பிரீத்தி ஜிந்தா மற்றும் வீரர்கள் ஆறுதல்படுத்தினர்.

ஹர்பஜன் சிங்கைப் பார்த்து அதிர்ஷ்டம் இல்லை என்று சிறிசாந் கூறி அவரை வெறுப்பேற்றியுள்ளதாக தெரிகிறது.



இது தொடர்பாக இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஹர்பஜன் சிங்கிடம் இச்சம்பவம் குறித்து கேட்டபோது கிரிக்கெட் பற்றி மட்டும் பேசுவோம் என்று கூறிவிட்டார்.'

எனினும் இந்தச் சம்பவம் மிகுந்த அதிர்ச்சி அளிப்பதாக பஞ்சாப் கிங்ஸ் லெவின் அணியின் தலைவர் யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

இது ஒரு மோசமான சம்பவம் என்றும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதை ஏற்க முடியாது என்றும் கூறிய யுவராஜ் சிங் இந்த சம்பவம் தம்மை மிகவும் அதிர்ச்சி அடைய செய்திருப்பதாக தெரிவித்தார்.

ஹர்பஜன் சிங்கிற்கும் சிறிசாந்திற்கும் இடையே என்ன நடந்தது என்று தமக்கு தெரியாது என்றும் அவர் கூறினார்.

இந்த சம்பவம் வேதனையானது என்று பஞ்சாப் அணியின் பயிற்சியாளர் டொம் மூடியும் கூறியுள்ளார்.

ஒரு போட்டி நடந்த பின்னர் இரு அணியின் வீரர்களும் கைகுலுக்கி கொள்ள வேண்டுமே தவிர இது போல் நடந்து கொள்வது ஏற்கத் தக்கதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தங்களுக்குள் சமரசம் ஏற்பட்டு விட்டதாக ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

மும்பை செல்லும் வழியில் நேற்றுக் காலை சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய ஹர்பஜன் சிங், வீரர்கள் அனைவரும் ஒரு குடும்பத்தினர் என்றும் குடும்ப உறுப்பினர்களுள் பிரச்சினை எழுவது இயல்பு என்றும் தங்களுள் சமரசம் ஏற்பட்டு விட்டது என்றும் கூறினார்.

இதனிடையே ஹர்பஜன் சிங் தனது மூத்த சகோதரரை போன்றவர் என்றும் தன்னை அடிக்க அவருக்கு உரிமை உள்ளது என்றும் சிறிசாந் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து ஹர்பஜன் சிங் மீது தாம் எந்தப் புகாரும் கூறப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஹர்பஜன் சிங் தனது அறைக்கு வந்து தமது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோரிவிட்டதாகவும் சிறிசாந் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து கருத்து தெரிவிக்க மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் சச்சின் டெண்டுல்கர் மறுத்துவிட்டார்.

இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக விளக்கம் கேட்டு ஹர்பஜன் சிங்கிற்கு இந்திய கிரிக்கெட் சபை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஒழுக்கமின்மை மற்றும் வீரர்களுக்கான நடத்தை விதியை மீறியது தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

நாளைக்குள் இதற்கு பதிலனுப்ப வேண்டுமென்று அவருக்கு கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக ஹர்பஜன் சிங்குக்கு சில போட்டிகளில் ஆட தடைவிதிக்கப்படலாம் என தெரிகிறது.

இந்திய அணியில் இடம்பெற்றுள்ள ஹர்பஜன் சிங்கும் சிறிசாந்தும் உண்மையிலேயே நல்ல நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## தோனியிடம் மயங்கிய பாலிவூட் நடிகைகள்

கிரிக்கெட் உலகில் குறுகிய காலத்தில் பெயரும் புகழும் சம்பாதித்தவர் தோனி.

இருபது -20 உலகக் கோப்பை வென்றதால் அவர் புகழின் உச்சத்துக்கு சென்றுவிட்டார்.

அதைத் தொடர்ந்து ஒருநாள் போட்டியின் அணித் தலைவரானார். இதிலும் அவர் திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

தோனிக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். குறிப்பாக இளம் ரசிகைகளின் பார்வை பெரும்பாலும் அவர் பக்கம் தான். அந்த வரிசையில் பாலிவூட் நடிகைகளும் இடம்பெற்றுள்ளன.

பிபாஷாபாசு, இஷாதி யோல், ரெய்மா சென், செங் கனாரனாவத், அம்ரிதா அரோரா ஆகியோர் தோனியின் அழகில் மயங்கியுள்ளனர். (5)

## குமார் சங்கக்காரவின் விளாசலில் பஞ்ஜாப் அணிக்கு முதல் வெற்றி

## டெண்டுல்கர் அணி 'ஹட்ரிக்' தோல்வி

(மொகாலி)

சங்கக்காரவின் அதிரடியான ஆட்டத்தால் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 66 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் சர்வதேச பிரபல வீரர்கள் உள்ளூர் வீரர்கள் உள்ளடங்கிய 8 அணிகள் மோதுகின்றன.

இத்தொடரின் 10ஆவது லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் யுவராஜ் சிவ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் டெண்டுக்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும்மோதின. மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் டெண்டுகர் பூரண உடல் தகுதி பெறாமையால் இப்போட்டியிலும் ஆடாத நிலையில் ஹர்பஜன்சிங் தலைமை தாங்கினார்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் காலத்தடுப்பைத் தீர்மானித்தது.



இதனடிப் படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ்லெ வின் பஞ்ஜாப் அணி சங்கக்காரவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 182 ஓட்டங்களை யெடுத்தது. இதில் குமார் சங்கக்கார' 56 பந்துக்களில் (13 பௌண்டரிகள் ஒரு சிக்சர் உட்பட) 94 ஓட்டங்களையும் எடுத்து 6ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார் மற்றும் யுவராஜ் சிங், ஹோல் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிவ் 3விக்கெற்றுக்ளையும் நெகரா, குல்வர ரணி ஆகியோர் தலா 2விக் கெற்றுக்களையும் வீழ்த்தினர்.



பதிலுக்கு 20 ஓவர்களில் 183 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 116 ஓட்டங்ளை மாத்திரமெடுத்து 66 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இத்தோல்வியுடன் மும்பை இந்தியன்ஸ் அணி விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

இதில் பிரவோ 23 ஓட்டங்களையும் மற்றும் பொலக் 22 ஓட்டங்களையும் மற்றும் உத்தப்பா 21 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் பதான், ஸ்ரீசாந்த் மற்றும் பியூஸ் சாவ்வா ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.'

ஆட்டநாயகனாக குமார் சங்கக்கார தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணி தொடரில் விளையாடிய 3 ஆட்டங்களில் முதலாவது வெற்றியைப் பெற்றது. (5)

## ஐ.சி.சி தலைவருடன் மோதல் தலைமை நிர்வாகி விலகல்



(டுபாய்)

சர்வதேச கிரிக்கெற் சபையின் (ஐ.சி.சி) தலைமை செயல் அதிகாரி மல்கம் ஸ்பீட்டின் (அவுஸ்திரேலியா) பதவிக்காலம் ஜுலை 4ஆம் திகதி வரை இருக்கின்றது.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் அவர் இந்த பதவியை வகித்து வந்தார். இந் நிலை யில் அவருக்கும் ஐ.சி.சி. தலைவர் ராய்மாலிக்குக்கும் (தென் ஆபிரிக்கா) இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ராய் மாலி சிம்பாவேக்கு ஆதரவானவர். அந்த நாட்டுகிரிக்கெற் அணிக்கு எதிராக பெரிய அளவில் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்ற ராய்மாலியின் முடிவுக்கு,ஸ்பீட் எதிர்ப்பு தெரிவித்தார்.

மோதல் உச்சக்கட்டம் அடைந்ததால் பத விக்காலம் முடியும் முன்பே அந்த பொறுப்பில் இருந்து ஸ்பீட் விலகி இருக்கிறார். இது குறித்து ஐ.சி.சி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், மல்கம் ஸ்பீட்டுக்கு ஏப்ரல் 30ஆம் திகதியில் இருந்து ஒப்பந்த காலம் முடியும் நாளான ஜலை 4ஆம் திகதி வரை ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக் கப்படுகிறது. ஜிம்பாவே உட்பட சில பிரச்சினைகளை கையாள்வதில் ஸ்பீட்டுக்கும், ஐ.சி.சி தலைவர் உட்பட சில உறுப்பினர்க ளுக் கும் இடையே அடிப்படை உறவில் முறிவு ஏற்பட்டதை தொடர்ந்து இந்தமுடிவு எடுக்கப் பட்டுள்ளது.

இதையடுத்து இடைக்கால ஜ.சி.சி தலைமை செயல் அதிகாரியாக ஜ.சி.சி பொது மேலாளர் டேவிட் ரிச்சர்ட்சன் நியமிக்கப்பட்டுள்ளார். ஜலை மாதம் நடக்கும் ஆண்டு பொதுக் குழு கூட்டத்தின்போது புதிய தலைமை செயல் அதிகாரியாக ஏற்கனவே தேர்வுசெய்யப்பட்டுள்ள ஹரூன் லார்கட் பொறுப்பேற்று கொள் வார். (5)

# மலைப்பாம்புக்கு முத்தம் கொடுத்து நமீதா நடனம்



மலேசியாவில் உள்ள லங்காவி காட்டில் இடம் பெற்ற பாடல் காட்சி ஒன்றிற்கான படப்பிடிப்பில் நடிகை நமீதா தோளில் மலைப் பாம்பை வைத்திருந்தவாறே அதற்கு முத்தமிட்டு நடனமாடி அசத்தினார். "இந்திரவிழா" என்ற புதிய படத்திற்கான படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நடிகர் ஸ்ரீகாந்துடன் இடம் பெறும் பாடல் காட்சி ஒன்றில் பெரிய மலைப்பாம்பை தோளில் போட்டுக் கொண்டு நடனமாட வேண்டும் என்று நமீதாவுக்கு கூறப்பட்டது.

முதலில் தயங்கிய அவர் பின்னர் படப்பிடிப்பு குழுவினர் அளித்த தைரியத்தில் துணிந்து நடிக்க முன்வந்தார்.

இதையடுத்து கிவ் மீ மோர்... கிவ் மீ மோர்... தகதிமிதா... நமீதா என்ற பாடல் காட்சியில் லாவகமாக பாம்பை சுமந்தவாறே அதற்கு முத்தமிட்டு நடன மாடி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

# மீண்டும் நடிக்க வரும் ஜோதிகா



மீண்டும் நடிக்க வருகிறார் ஜோதிகா. ஆஹா என்று ஆனந்தப்படுவார்கள். இந்த செய்தியின் மிச்சத்தையும் படித்தால், ஓஹோ என்று சந்தோஷப்படவும் செய்வீர்கள்.

தன்னுடைய அகரம் பவுண்டேஷன் சார்பாக இரண்டு ஆதி திராவிட பள்ளிகளை தத்தெடுத்திருக்கிறார் நடிகர் சூர்யா.

இந்த விழாவுக்கு வந்திருந்த கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் மேலும் ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பி னாராம் சூர்யா. அப்போது பெண் கல்வியை வலியுறுத்தி ஒரு குறும்படம் எடுக்கலாமே என்று அமைச்சர் ஐடியா கொடுக்க, தன் செலவில் அந்தக் குறும் படத்தை எடுக்கத் துவங்கி விட்டார் சூர்யா.

கண்டநாள் முதல் பட இயக்குநர் பிரியா இயக்கும் இந்தப் படத்தில் தான் நடிக்கிறார் ஜோ. இதுமட்டுமல்ல, இப் படத்தில் நடிக்க சம்மதித்திருக்கிறார்களாம் விஜய்யும் மாதவனும்.

நிச்சயமாக சூர்யாவும் நடிப்பார். ஆக முப்பெரும் ஹீரோக்கள் இணையும் இந்தப் படம் கிராமப் பெண் குழந்தைகளை பள்ளிக்கு இழுத்து வரும் என்ற நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது.

நமது ஹீரோக்களின் பேஷியல் வேல்யூ இது போன்ற சோஷியல் சர்வீஸ்களின் காரணமாக இன்னும் பளபளப்பாகிறதே!

# "நியூட்டனின் மூன்றாம் விதி"யில் ஒப்பனை இல்லாத எஸ்.ஜே.சூர்யா



"பெண்களுக்கு பிடித்தமான கதாபாத்திரத்தில் மட்டும் நடிப்பேன்; செக்ஸியான டயலாக்குகள் இருக்காது" என்ற கொள்கையுடன் புதிதாக மாறியுள்ள எஸ்.ஜே.சூர்யாவிடம் மேக்கப் விஷயத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.


சாய்ரூத்து செல்வா இயக்கத்தில் எஸ்.ஜே. சூர்யா நடித்து வரும் படம் "நியூட்டனின் மூன்றாம் விதி", "24 மணி நேரத்திற்குள் உன்னை ஒட்டாண்டி ஆக்கி காட்டுகிறேன் பார்..." என்று கோடீஸ்வரனான வில்லனிடம் சவால் விடும் நாயகன் அதை எப்படி நிறைவேற்றுகிறான் என்பது தான் கதை.

படத்தின் கதாநாயகி இன்னும் முடிவாகாத நிலையில் துரத்தும் காட்சி ஒன்று படமாகிவருகிறது.

எஸ்.ஜே.சூர்யாவை வில்லன் ராஜ்கிருஷ்ணாவின் ஆட்கள் காரில் துரத்துவது போன்ற காட்சி போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில் படமாக்கப்பட்டது. திடீரென கார்கள் சீறிப் பாய்ந்ததைப் பார்த்த பொதுமக்கள் அலறியடித்து ஓடத் தொடங்கினர். பின்னர் அது படப்பிடிப்பு எனத் தெரிந்ததும் அமைதியாகினர்.

கதைப்படி எஸ்.ஜே.சூர்யாவுக்கு அதிமுக்கிய பாத்திரம் என்பதால் ஒப்பனை எதுவும் இல்லாமல் நடிக்கிறாராம். பாடல் காட்சி தவிர படம் முழுவதும் ஒப்பனை இல்லாமலேயே நடிப்பது என முடிவெடுத்துள்ளாராம் சூர்யா. தினமும் இரண்டு மணி நேரம் உடற்பயிற்சிகளையும் மேற்கொண்டுள்ளாராம்.

## சினி விமர்சனம்



கடவுளை காண அறைகூவல் விடும் நண்பர்களின் அறைக்கு கடவுள் வருவதும், அந்தக் கடவுளையே கலாட்டா பண்ணுவதும் என்று கலகலப்பான படமாக உருவாகியிருக்கிறது அறை எண் 305 ல் கடவுள்.

# "அறை எண் 305ல் கடவுள்"



## சிரிப்போ சிரிப்பு

வேலை தேடுகிற வேலை செய்யும் இளைஞர்களான சந்தானமும், கஞ்சாகருப்பும் சென்னை திருவல்லிக்கேணி தொடர்மாடி வாசிகள். வேலை கிடைக்காமல் இவர்கள் படுகிற பாடு சிரிப்பலைகள். தொடர்மாடி வாடகையில் இருந்து... வயிற்றை நிரப்ப "மெஸ்" வரை கடனோ கடன். நாளைக்கு பணத்தோடு வந்தால் மாடியில் இருக்க லாம். இல்லையேல் பெட்டி படுக்கை யெல்லாம் ரோட்டில்தான் என்கிற நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இந்த ஆதங்கத்தில் இருவ ரும் மொட்டை மாடியில் நின்றுகொண்டு சின்சியராக யோசிக்கிறார்கள். அப்போது, ஏ கடவுளே... நீ ஒரு அப்பனுக்கு பொறந்தவன்னா நேரிலே வாடா... என்று அறைகூவல் எழுப்புகிறார்கள்.

சட்டென ஒருமின்னல் ஒளி... எதிரில் வந்து புன்னகைக்கிறார் கடவுள். அதன்பிறகு நடக்கும் கூத்துக்களும், கலாட்டாக்களும், ஆர்பாட்டங்களும், அக்கப்போர்களும் கலகலப்பு. கடவுள் அவதாரம் எடுத்திருப்பவர் பிரகாஷ்ராஜ். சந்தானமும், கஞ்சா கருப்பும் அழைத்ததை ஏற்று பூலோகத்தில் தோன்றி படாதபாடு படுகிறார். சந்தானம், கருப்புடன் அவர்கள் செல்லும் இடத்துக்கெல்லாம் செல்கிறார். காதலி யிடம் பேசத் துடிக்கும் சந்தானத்தை காதலியிடம் பேச வைக் கிறார். டூயட் பாட வைக்கிறார். வயிற்று பசியைப் போக்க சொடுக்கு போடுகிற நேரத்தில் ஒரு விருந்தே நடத்துகிறார். இருப்பினும் பணம் தரமாட்டேன் என்று கட்டளை போடுவதால் கடவுள் உருப் படியாக எதுவும் செய்யவில்லை என்ற மனக்குறையே சந்தா னத்துக்கும், கருப்புவுக்கும் மேலோங்கி நிற்கிறது. இதனால் ஒன்றுமே செய்யாத கடவுளிடம் இருக்கும் அதிசய கருவியை தூக்கிக்கொண்டு தலைமறைவாகிறார்கள் இருவரும். அதன் பிறகு கடவுளே வீதியில் கடலை விற்று பிழைப்பு நடத்தும் சூழ் நிலைக்கு தள்ளப்படுகிறார். இப்படி படம் முழுக்க காமெடி காட்சிகள் வயிறு வலிக்க சிரிக்க வைக்கிறது.

## பிரகாஷ்ராஜின் நடிப்பில் இன்னொரு மைல்கல்

பிரகாஷ்ராஜின் முகத்திலா இவ்வளவு சாந்தம். நடிப்பில் இன்னொரு மைல்கல்லை அடைந்துவிட்டார். தன் பெயரால் நடக்கிற கொடூரங்களைக் கண்டு பதறுவதும், நாத்திகரான ராஜேஷிடம் கடவுள் பற்றி விளக்கம் கொடுப்பதும் அருமை. கடவுள் பேசுகிற வசனங்கள் நச்.. நறுக்...ரகம்.


ஹீரோ போல மின்னுகிறார் சந்தானம். ரோஜாபூவை வாடகைக்கு எடுக்கிற சந்தானம். வேலைக்குப் போய், முதலாளியிடம் அவமானப்பட்டு, பிறகுநேரம் வரும்போது அதை கையேந்தி பே ஆக்கிவிட்ட போதெல் லாம் குபீர் சிரிப்பு. இன்டர்வியூவில் தன்னை நரி என்று வர்ணித்த முதலாளியை, நரியாகவே கூண்டில் அடைக்கிற சந்தானத்தின் குறும்பு ரசிக்க வைக்கிறது.

கஞ்சா கருப்பு வழக்கமான பாஷையில் கலக்கியிருக்கிறார். மேடையில் முழங்கிக்கொண்டிருக்க, வாளியுடன் உள்ளே வந்து, நீ குளிக்க போடா என்று சந்தானம் சொல்லும் காட்சியில் புதுமை, கனவையும், நிஜத்தையும் முடிச்சு போடும் அந்தக் காட்சி ரைடக்டரின் கற்பனைக்கு கிடைத்த வெற்றி.

இவர்கள் தவிர பிரகாஷ்ராஜை ஒரு தலையாக காதலிக்கும் ஜோதிர்மயி. க்ளைமாக்சில் ஷாக் கொடுக்கிற மதுமிதா என்று பலரும் படத்துக்கு பூஸ்ட்.. தனது வேலைகளை முடித்துவிட்டு மேலோகம் செல்லும் கடவுள், மறுபடியும் தொடர்மாடி வாசிகளின் அழைப்பை ஏற்று பூலோகத்திற்கு திரும்பும்போது தனது விஷேச கருவிக்கு அத்தனை பூட்டுக்கள் போட்டிருப்பது சிரிப்போ சிரிப்பு.

வித்யாசாகரின் இசையில் நான்கு பாடல்கள் சுமார் ரகம். சில காட்சிகள் அலாவுதீனும் அற்புதவிளக்கும் படத்தை நினைவூட்டு வது மட்டுமே மைனஸ். அறை எண் 305 இல் கடவுள் – சிரிப்போ சிரிப்பு.

# வெற்றிமாறனின் இயக்கத்தில் சிம்பு



சிம்பு நடிக்கும் ஒரு படத்தை இயக்க இயக்குநர் வெற்றி மாறன் ஒப்பந்த்மாகியுள்ளார்.

எதிரெதிர் துருவத்தில் இருக்கும் சிம்புவையும், தனுஷையும் இணைத்து ஒரு படத்தில் நடிக்க வைக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில், தனுஷ் படத்தை இயக்கிய வெற்றி மாறன் இயக்கத்தில் சிம்பு ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.

க்ரூப் கம்பெனி சார்பில் கதிரேசன் தயாரித்த படம் "பொல்லாதவன்" தனுஷ்–வெற்றிமாறன் காம்பினேஷனில் வெளிவந்த இப்படம் பெரும் வெற்றியைப் பெற்றது. இதனைத் தொடந்து "பொல்லாதவன்" கூட்டணி மீண்டும் ஒரு படத்தில் இணைகிறது.

இன்னும் பெயரிடப்படாத அப் படத்தின் படப்பிடிப்பு ஜூன் மாதம் தொடங்குகிறது. "படிக்காதவன்" படத்தில் நடித்துவரும் தனுஷின் அடுத்த கால்ஷீட் வெற்றிமாறனுக்குத்தான்.

இதனைத் தொடாந்து வெற்றிமாறன் இயக்கவுள்ள படத்தில் நாயகனாக நடிக்க சிம்பு ஒப்பந்தமாகியுள்ளார். இதனையும் குரூப் கம்பெனி சார்பில் கதிரேசனே தாயாரிக்கிறார். சிம்புவுக்கு ஜோடியாக அநேகமாக திவ்யாவே நடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன் லம்யா என்ற பெயரில் "குத்து" படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக திவ்யா நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# விஜய் ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படம்

## மே 1 இல் விஜய் இன் 'குருவி'

நடிகர் அஜித் பிறந்த தினமான மே 1ஆம் திகதி நடிகர் விஜய் நடித்துள்ள கூஷ குருவி' படம் ரிலீசாக உள்ளது.


"அழகிய தமிழ் மகன்" படத்தைத் தொடர்ந்து விஜய் நடித்து வரும் படம் "குருவி". இப்படத்தை தரணி இயக்கி வருகிறார். இவர்கள் இருவரும் இதற்குமுன்னர் "கில்லி" என்ற மாபெரும் வெற்றிப்படத்தை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"கில்லி" படத்தில் பணியாற்றிய கலைஞர்கள் பெரும்பாலானோர் இந்த குருவி படத்தில் பணியாற்றுகின்றனர். விஜய் ஜோடியாக த்ரிஷா நடிக்கிறார். வித்யசாகர் இசையமைக்கிறார். வில்லன் வேடத்தில் சுமன் நடிக்கிறார்.

சென்னையில் பல்வேறு இடங்களிலும் சேலம், தேனி, ஏற்காடு போன்ற இடங்களிலும் மலேசியாவிலும் இப் படத்தின் ஷூட்டிங் நடைபெறவுள்ளது. நியூசிலாந்தில் விஜய் த்ரிஷா பங்குபெற்ற டூயட் பாடல் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. விஜய்க்கே உரித்தான அதிரடி சண்டைக்காட்சிகள், நகைச்சுவை காட்சிகள், மிரள வைக்கும் நடனம் போன்ற அம்சங்களின் கூட்டு கலவையாக இப்படம் உருவாகி இருப்பதாக பேசப்படுகிறது.

இதற்காக சென்னையில் 250 பிரிண்ட்டுகளும் கேரளாவிற்கு என 55 பிரிண்ட்டுகளும் போடப்பட்டுள்ளது. இப்படத்தின் கேரள உரிமை 1.5 கோடிக்கு விற்பனையாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. விஜய் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இப்படம் மே 1ஆம் திகதி ரிலீசாகிறது. அன்று நடிகர்

# கே.எஸ்.ரவிக்குமாரின் இயக்கத்தில் இரட்டைவேடம் போடும் சரத்குமார்



கே.எஸ்.ரவிக்குமாரும் சரத்குமாரும் இணையும் படங்கள் வெற்றியைக் காணாமல் விடாது. மீண்டும் வெற் றிக்கு ஆயத்தமாகிவிட்டது இந்த ஜோடி.

சன் தொலைக்காட்சியும், ராடன் டி.வி.யும் இணைந்து 15 படங்கள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்முதல் படமாக கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கிறார்.


பிரமாண்ட தயாரிப்பாக உருவாகவிருக்கும் இப்படத்தில் சரத்குமார் தந்தை – மகன் கதாபாத்திரத்தில் இரட்டைவேடம் போடுகிறார். ஒரு சரத்குமாருக்கு ஜோடி சினேகா. சரத் – சினேகா தம்பதியின் மகளாக ஸ்ரேயா நடிக்கிறாராம். படத்தில் சில காட்சிகளில் வரும் ஸ்ரேயா இறந்துபோவது போன்று கதை அமைக்கப்பட்டுள்ளது.



இப்படத்தில் கதை பிரஞ்ச் படமொன்றின் தழுவல் என்று கூறப்படுகிறது. பெரும்பாலான படப்பிடிப்புகளை ஜப்பானில் நடத்தத் திட்டமிட்டுள்ளார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார். கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் இரட்டை வேடத்தில் நடித்த நடிகர்களின் படம் சூப்பர் ஹிட் ஆவது வழக்கம். அதிலும் சரத்குமார் காம்பினேஷனில் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கிய இரட்டை வேடப் படங்கள் எல்லாமே நூறு நாட்களை கடந்து ஓடியவை. இந்த வகையில் புதிய படமும் மெகா ஹிட்டாக அமையும் என ஆரூடம் கூறுகிறது தயாரிப்பு வட்டாரம்.

# தம்பரம் (திண்ணபுரம்)
# ரீ சமேத நடராஜப் பெருமான்
# கள் நிறைவு -சிறப்புமலர் 28.04.2008





## த்தானிற்கு 100ஆண்டுகள் நிறைவு

யங்கள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேயப் பெருமானின் ஆலய ஆகிய ஸ்தல சிறப்புக்களையும் பெற்ற இவ் ஆலயம் தென்னகத்தில் தல மகிமை கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியச் சிறப்புப் பெற்றுள்ளது. இதனால் ும் பெயரும் வழங்கலாயிற்று.

ட்ட பழமை பொருந்திய இவ் ஆலயத்தில் அம்பலவி முருகனார் என்பவர் ஐயனார் லை நடராஜப் பெருமானின் திருவடிவத்தினையே ஐயனாரிடத்தில் கண்டார் என்றும், கழும் திருமஞ்சன விழாவை அம்முறை வழுவாது ஐயனார் கோயிலிலும் செய்வித்தார் தப் போலவே செய்வித்தார். பின்பு தமது அகத்தில் கண்ட நடராஜப் பெருமானை க்கு நூறு ஆண்டுகளிற்கு முன்னர் அதாவது 1908ம் ஆண்டு சிவகாமி சுந்தரி சமேத பட்டார்

ஜர் உருவம் அமைந்துள்ளதாலும் ஐம்பத்தொரு சுடர்கொண்ட திருவாசி நடராஜர் இவ் ஆலயம் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படுகிறது. 'வீடு தரக் கூத்தாடும் னத்தை விளையாட்டாக செய்து உயிர்களிற்கு பேரின்ப முத்தியருளுஞ் சாதுரியம் ுருவம் 1908ஆம் ஆண்டு சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்திலே பிரதிஷ்டை று அபிஷேகம் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது.

கு சிங்கத் திங்கள் தம்மிற் சிறந்து நிற்கும்
சதுர்த்தசியில் புகழாணி யுத்தரத்தில்
சித்திரையி யேன்ற திரு வோணன் தன்னில்
கூத்தருக்குத்திருமுழுக்கு நிகழ்ந்ததுவாராய்'

மார்கழி திருவாதிரையுடன் மாசி, ஆவணி புரட்டாதி, ஆகிய மாதங்களில் பூர கழ் பூத்த ஆனி உத்தரத்திலும் அழகமைந்த இளவேனில் காலத்து சித்திரை மாதத்து அபிஷேகம் நடைபெற்று வருவதனைக் கூறுகிறது.

போது அதாவது இறைவனுக்கு நெய்,தயிர்,பால்,தேன், இளநீர், எண்ணெய் முத ் போது இவ்வுலகின் புகழையும் உடல் நலத்தையும் தருவதுடன் மறுமையிலும் ன்று சைவாகமங்கள் கூறுகின்றன.

ய்வைச்செவ் வாயிற் குமின் சிரிப்பும்
் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
ந்த பொற் பாதமும்ங் காணப் பெற்றால்
ண்டுவ தே ந்த மாநிலத்தே

த அமைய நாம் அனைவரும் கூத்தப்பிரானின் ஆடற் கோலத்தையும் சிவகாமி அம் டை செய்யப்பட்டு நூறாவது வருட நிறைவான நாளான 28. 04. 2008 திங்கட்கிழமை டாத்தர சகஸ்ர (1008 ) கலச சங்காபிஷேகத்தையும் கண்டு வழிபடும் பேறு பெற்றவர் றவர்களே இவர்கள் மனிதப் பிறவியின் பயனைப் பெற்றவர்கள் எனலாம். ஆதலால் வப்பேறு அடைவோமாக .

*ப. ஐங்கரன் , வாரிவளவு காரைநகர்.*

## பிரதமகுருவின் ஆசிச்செய்தி



ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப் படுவது காரைநகர்ச் சிவன் கோவில் ஆகும். சிதம்பரம் என்னும் சொல்லுக்கு பொருந்தமான ஐம்பத்தொரு சுடர் களை கொண்ட திருவாசியுடன் சிவகாம சுந்தரி சமேத நடராஜப்பெருமான் இங்கு எழுந்தரு ளியுள்ளார். இந்த நடராஜா முகூர்த்தம் பிரதிஷ்டை செய்து 100 ஆண்டுகள் நிறைவு அடைகின்றது.

அதனையொட்டி பஞ்ச குண்ட பட்ச அஷ்டோத்திர சக்ஸ்ர (1008 )கலச சங்காபிஷேகம் இன்று நடைபெறு கின்றது. இந்த சங்காபிஷேகத்தின் பிரதம குருவாக இருந்து நடாத்தும் வாய்ப்பு சிறியேனுக்கு கிடைத்துள்ளது.

இந்நேரத்தில் என்னுடைய பாட்டா சிவஸ்ரீ கணபதீஸ் வரக்குருக்கள் அவர்களை நான் நினைவு கூருகின்றேன். அவரே என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவைத்தவர்.

இந்த சங்காபிஷேக விழா இனிதே நடந்தேற பூரண புட்கலை சமேத ஆண்டிகேணி ஐயனாரையும் சௌந்தரா பிகா சுந்தரேஸ்வரப்பெருமானையும் எனது குரு மணி யையும் மனத்தில் இருத்தி நல்லாசி வழங்குகின்றேன்.

*சிவ ஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்கள்.*
*பிரதமகுரு ஈழத்துச் சிதம்பரம்*

## சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியுரை



இந்தியாவிலுள்ள சிதம்பரத் திருத்தலத்துக்கு அடுத் ததாக எமது நாட்டிலும் எமது மண்ணிலும் ஓங்கி ஒலித் துக்கொண்டிருக்கிற புண்ணிய சேத்திரம் ஈழத்துச் சிதம்பரமாகும். இங்கு சௌந் தராம்பிகை சமேதராக சுந்தரேஸ்வரப் பெருமான் அருளாட்சி புரிகின்றார். மேலும் இங்கு கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெரு மானை பிரதிஷ்டை செய்து இன்று நூறு ஆண்டுகள் நிறை வடைகின்றது. இப்புண்ணிய வேளையில் கூத்தப் பெரு மானுக்கு பஞ்ச குண்ட அஷ்டோத்திர சகஸ்ர சங் காபி ஷேகம் நிகழ இருப்பது அனைவருக் கும் சாந்தியை யும் அமைதியையும் தருவதாகும். ஈழத்துச் சிதம்பர திருத் தலத்தில் கால் நூற்றாண்டு காலம் மணிவாசகர் விழா வில் கலந்து உரையாற்றிய பேறு எனக்கு உண்டு. இன்று நடைபெறவுள்ள சங்காபிஷேகப் பெருவிழா வில் கலந்து கொள்ளும் பேறுபெற்றவர்கள் புண்ணியசாலிகளே என்பதைக் கூறி அமைகின்றேன்.

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*
*சமாதான நீதிபதி*
*தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை.*

## ஆதீன கர்த்தாக்களின் உள்ளத்திலிருந்து...

ஈழத்தின் சப்த தீவுகளில் ஒன்றான காரைநகரில் ஈழத்திலே மிகவும் சிறப்புப்பெற்ற தலமாக விளங்கு வதே ஈழத்துச் சிதம்பரமாகும். எமது மூதாதையர் கட் டிக்காத்த பாரம்பரியங்களை இன்னமும் பின்பற்றி இந்திய சிதம்பரத்தில் நடைபெறும் கிரியை முறைப் படி பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தில்லைக் கூத்தனின் திருநடன நட ராஜர் சிலை பிரதிஷ்டை செய்து நாளையுடன் நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந் நூற்றாண்டு நிறைவையிட்டு 28.04.2008 - அதாவது நாளை திங்கட் கிழமை விசேட பூசை வழிபாடுகளும் பஞ்சகுண்ட பட்ச அஷ்டோத்தர சகஷ்ட (1008)கலச சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.இவ்விஷேட அபிஷேக கிரியை கள் சிறப்பாக நடை பெற ஒழுங்கு செய்தவர்கள் அனைவரும் போற்றப் படவேண்டியவர்கள். இதற்கு முன்னின்ற அனைத்து அடியார்களும் பல சௌபாக்கி யங்களையும் பெற்றுய்ய இறைவனைப் பிரார்த்திப் பதோடு இந்நிகழ்வினையொட்டி விசேட சிறப்பு மலர் வெளியிட்ட வலம்புரி நாளிதழுக்குப் பொது நன்றி களையும் தெரிவித்து அமைகின்றோம்.

*ஈழத்துச் சிதம்பரத் தேவஸ்தானம் காரைநகர்.*


*ஆதீன கர்தாக்கள்*
*ஆ. அம்பலவி முருகன்*
*மு. சுந்தரலிங்கம்*

## இரு கரமும் யாம் கூப்பி வணங்குவோமே!

திண்ண புரத் தலத்தமரும் கூத்தனாரின்
திருவுருவு தாபித்து நூறு ஆண்டு
எண்ணுழனே வந்ததென அடியார் போற்றி
ஏற்றமிகு அந்தணர்தம் ஆசி பெற்று
அண்ணலவன் நாமங்கள் பலவே கூறும்
அந்தணரும் அர்ச்சித்து ஆக்கித்தந்த
எண்ணரிய சங்கினால் அபிடேகிக்க
இருகரமும் யாம் கூப்பி வணங்குவோமே.

*கவிஞர் வே. குமாரசுவாமி - காரைநகர்.*

## நல்லீழச் சிதம்பரத்தை நண்ணுவோமே



ஆண்டுகள் நூ றின் முன்னர் ஆண்டி கேணி
ஐயனவன் கோவில் அறங் காவர்கள்
காண்பவரைக் காந்தமெனக் கவர்ந்தே கொள்ளும்
கற்கோவில் ஒன்றிணையே கவினாய்க் கட்டி
வேண்டிடு நற் கிரியையபி ஷேகம் பூசை
வேதியரைக் கொண்டுவிரிவாகச் செய்தே
தாண்டவனைத் தாபித்த தலைநன் னாளாம்
தவமுடையார் மனம் நினைந்து தழைக்கும் இந் நாள்
கோவிலெனச் சிறப்பாகக் குறிக்கப்பெற்று
குவலயத்துச் சைவரெலாம் கும்பிட்டுய்யத்
தேவர்களும் மூவர்களும் தினமும் காணத்
திருச்சிற்றம் பலத்தாடும் தில்லைக் கூத்தன்
ஆவலுடன் தேடிவந்தே ஆடல் செய்யும்
அற்புதப் பெற் பதியாக அமைந்தே எல்லா
நாவலரும் பாவலரும் நயந்தே போற்றும்
நல்லீழச் சிதம்பரத்தை நண்ணுவோமே
அஞ்சேலென் றபயமளித் தருளும் கையை
ஆறுபடர் சடையையக் கினிசேர் கையை
விஞ்சிடுவெண்ணீறுடனே மினுங்கும் மெய்யை
விண்வட்ட மானதிரு வாசிச் சீரை
குஞ்சிதபா தத்தழகைக் குமிண்சிரிப்பை
குனித்தபுருவத்தை ஒளி பிறக்கும் கண்ணை
தஞ்சமருள் தாண்டவனின் எழிலைச் சொல்லும்
தமிழறியேன் தரிசனந்தான் வேண்டும் என்பேன்.
பால் இளநீர் பசுந்தயிர் பஞ்சாமிர் தம்தேன்
பழவகை நெய் பன்னீர் சந்தனம்வெண் ணீற்றால்
காலை முதல் நடராஜர் அம்மை யார்க்குக்
கருத்துடனே சிவாச்சார்யார் அபிஷே கித்துக்
கோல முறு சகஸ்ரகல சங்கள் சங்கம்
கொண்டுகங்கா தீர்த்த அபி ஷேகம் செய்யும்
சீலமிகும் திருக்காட்சி தெரிசித் துய்வோம்
சேர்ந்துவரு வீரிந்தச் செகத்திரெல்லாம்.

*மூதறிஞர் - சி. சிவசரவணபவன்*
*M.A (சிறப்பு)*

*மலரமைப்பு:- வலம்புரி செய்தியாளர் காரைநகர்*


# கணேசன் சென்ரர்



அனைத்து வகையான ஆடைகளையும்
பான்சி பொருட்களையும்
றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.
T.P. 021 222 5708 (C/1070)

# சீமாட்டி புடவைக்கடல்

கிளைகள்:- மங்கை சில்க்ஸ்
மொடேர்ன் மாக்கற்
(இல.15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.)
(இல.122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
T.P:- 222 2196 Fax. 222 2102 (C/1072)

வெஸ்ரேண் யூனியன் மூலம் எம்மிடம் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெறலாம்.
WESTERN (R) UNION
# SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
No.303, K.K.S. Road, Jaffna.
(C/1071)

ர்கள்
ஸ்
ி,
7144

துவிச்சக்கர வண்டிகள், அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், T.V டெக் வகைகள், றேடியோ வகைகள், அன்ரனா வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



# இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
இல.50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-222 2988, 3096 Fax. 222 2368
(C/1066)

ஏகவிநியோகஸ்தர்
யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிற்டெட், எனேர் ஐஸ்சர் லங்கா லிமிற்டெட், பொண்ரெறா பிறான்ட் லங்கா (பிறைவேற்) மலிபன் பிஸ்கட் உற்பத்தியாளர், லிமிற்டெட் , செல்காஸ் லங்கா லிமிற்டெட், U.S.A சமையல் எண்ணெய் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்.
# எஸ்.வி.முருகேசு
154,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2911 222 2202 (C/1065)

# மீண்டும் முகமாலையில் தடம்புரண்ட அரசின் பிரச்சாரப் போர்

வடபோர்முனையின் பிரதான கள முனையான முகமாலை களமுனையில் ஒரு பெரும் தாக்குதலுக்காக சிறிலங்கா இராணுவம் காத்திருக்கின்றது என்பது இங்கு பல தடவைகள் விவாதிக்கப்பட்ட ஒன்று. திறந்த தரையமைப்பை கொண்ட சமரந்தர நிலப்பரப்பில் கவசத்தாக்குதல் படையணியின் (Mechanized Infantry Brigade) உதவியுடன் விரைவாக முன்நகர முடியும் என்பது படை அதிகாரிகளின் கருத்து.

விடுதலைப்புலிகளின் நேரடியான துப்பாக்கி சூடுகளையும், எறிகணைகளின் சிதறல்களையும் கவசத் தகடுகள் மூலம் ஓரளவேனும் தடுக்க முடியும் என்பதும் அவர்களின் நம்பிக்கை. செறிவான சூட்டாதரவுடன் நகரும் படையினருக்கு கவசத்தாக்குதல் படையணியின் நகர்வுவேகம் பெரும் உறுதுணையாக இருக்கும் என்பது படைத்துறை வல்லுநர்களின் கருத்து. எனவே தான் மிகவும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு இந்த படையணி கடந்த வருடம் உருவாக்கப்பட்டிருந்தது.

கவசத்தாக்குதல் பிரிகேட்டானது 3 ஆவது சிலோன் இலகு காலாட்படை பற்றலியன், 10 ஆவது சிங்க றெஜி மெண்ட், 4 ஆவது கஜபா பற்றலியன், 5 ஆவது மற்றும் 6 ஆவது கவச படை பிரிவுகள் (இவை புதிதாக உருவாக்கப்பட்டவை) ஆகிய பற்றலியன்களை கொண்டது.

மன்னார் களமுனையில் பல முனைகளினூடான நகர்வுகளை படையினர் மேற்கொண்டு வருகையில் மணலாற்றிலும் ஒரு களமுனை திறக்கப்பட்டுள்ளது. அதாவது பல முனைகளில் விடுதலைப்புலிகளை வலிந்த சமருக்கு இழுப்பதன் மூலம் அவர்களின் பலத்தை சிதைத்துவிட்டு ஒரு குறிப்பிட்ட களமுனையினூடாக செறிவான நகர்வை ஆரம்பிப்பதே இராணுவத்தின் பிரதான நோக்கம்.

இந்த களமுனைகளில் கடந்த மாதங்களில் படையினர் மேற்கொண்ட பல நகர்வுகளில் சிலவற்றை விடுதலைப்புலிகள் எதிர்க்காது விட்டதும் படையினர் மத்தியில் பாரிய அச்சங்களை தோற்றுவித்திருந்தது. ஏனெனில் தமது படையணிகளை உள்ளே அனுமதித்து விட்டு எறிகணைகளால் வியூகம் அமைத்து தாக்கப்போகின்றனரா என்ற அச்சத்தில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளில் படையினர் விடுதலைப்புலிகளின் எதிர்ப்புக்கள் இன்றியே பின்வாங்கியிருந்தனர்.

இந்த களமுனையின் எல்லா புள்ளிகளும் விடுதலைப்புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார் அணிகளுக்கு நன்கு பரிச்சயமானவை என்பது அதற்கான காரணம். எப்போதும் பதற்றம் நிறைந்ததாகவே காணப்படும் இந்த களமுனையில் மோட்டார், பீரங்கி, பல்குழல் உந்துகணை செலுத்திகளின் தாக்குதல்கள், சினைப்பர், பொறிவெடி தாக்குதல்கள் என தினமும் தாக்குதல்கள் நடைபெறுவதுண்டு.

ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முகமாலை கள முனைகளில் அடிக்கடி நகர்வுகளை மேற்கொண்டு வரும் 55 ஆவது படையணி நான்காவது கெமுனுவோச் பற்றலியனின் கட்டளை அதிகாரி லெப். கேணல் ஜகத் ரத்நாயக்கா விடுதலைப்புலிகளின் சினைப்பர் தாக்குதலில் படுகாயமடைந்திருந்தார்.

எப்போது போர் வெடிக்கும் என்ற அச்சத்துடன் காணப்படும் முகமாலை களமுனையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை முன்நகர்ந்த படையினர் மீது நடத்திய தாக்குதலில் செக்கோஸ்லாவாக்கியா நாட்டு தயாரிப்பான ரீ-55 பிரதான போர் டாங்கி ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும், இராணுவம் கடுமையான இழப்புக்களை சந்தித்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர். இந்த மோதல்களில் முகமாலை முன்னரங்க நிலைகளின் பின்தளமாகவும், பீரங்கி மற்றும் மோட்டார் நிலைகளின் தளமாகவும் விளங்கும் எழுதுமட்டுவாள் பீரங்கிதளத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட எறிகணை தாக்குதல்களில் படையினருக்கும், கனரக ஆயுதங்களுக்கும் கடுமையான சேதங்கள் ஏற்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர். அதனை தொடர்ந்து மறுநாள் (23) அதிகாலை அங்கு பெரும் சமர் வெடித்தது.முகமாலையில் நடந்தது என்ன என்பது தான் தற்போது பலரது கேள்விகள்? கிடைக்கப்பெற்ற தகவல்கள் இதோ...



முகமாலை ஊடான ஆனையிறவு நோக்கிய முன்நகர்வு படையினரின் பிர தான நிகழ்ச்சி நிரலில் முன்னிலையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. கால நிலையும், படைபலமும் ஒத்துழைக்கும் போது இந்த நகர்வை மேற்கொண்டுவிட படைத்தரப்பு காத்திருப்பதுடன், அதற்கான ஆயத்தங்களிலும் அது தொடர்ந்து ஈடுபட்டுவருவதும் விடுதலைப் புலிகளுக்கு தெரிந்த விடயங்கள்.

கடந்த மாதம் 23ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பாதுகாப்புசபை கூட்டத்திற்கு வடபோர் முனை கட்டளை தளபதிகள் அழைக்கப்பட்டிருந்த போது, சிறப்பு விமானத்தில் யாழ்மாவட்ட கட்டளை தளபதி அழைக்கப்பட்டிருந்ததுடன், முகமாலையில் ஒரு அதிர்ச்சிகரமான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும் அவருடன் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தது.

கவசத்தாக்குதல் படைப்பிரிவு முழுமையாக உருவாக்கப்பட்ட பின்னர் இராணுவம் கிளாலி – முகமாலை – நாகர் கோவில் வரையான 20 கி.மீ அச்சில் பல தடவை சிறிய மட்டுப்படுததப்பட்ட நகர்வுகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்க்து. இந்த நகர்வுகள் களமுனைகளின் தன்மைகளை பரீட்சித்து பார்க்கும் ஒரு நடவடிக்கையாகவே கருதப்பட்டது.

படையினாரின் இந்த திட்டங்கள் விடுதலைப்புலிகள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர் என்பது அவர்களின் நடவடிக்கைகளில் இருந்து அறிந்து கொள்ள முடியும். இராணுவத்தின் கவசத் தாக்குதல் படையணியின் கவசவாகனங்களை முடக்கும நோக்குடன் பாரிய பதுங்குகுழிகளை விடுதலைப்புலிகள் அமைத்து வருவதுடன், லெப். கேணல் விக்டர் கவச எதிர்ப்பு படையணியையும் (Victor Anti Armor Regiment) நவீனப்படுத்தி வந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இராணுவத்தினர் மேற்கொண்ட நகர்வுகள் தொடர்பான விடயங்கள் விடுதலைப்புலிகளுக்கு முன்னரே தெரிந்துள்ளதாகவும், புதன்கிழமை நடைபெற உள்ள தாக்குதலுக்கான ஆயத்த வேலைகளில் இராணுவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே விடுதலைப்புலிகளின் விக்டர் கவச எதிர்ப்பு படையணியின் சிறப்பு கொமோண்டோக்கள் படையினரின் நிலைகளுக்கு அண்மையாக ஊடுருவி இராணுவத்தினரின் ரைப்-89 (Type-89) ரக கவசத்தாக்குதல் வாகனத்தை டாங்கி எதிர்ப்பு ஆர்.பி.ஜி (RPG-7 HEAT) மூலம் தாக்கியதாகவும் தனது பெயரை குறிப்பிடாத படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மீளவும் பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ள இந்த வாகனத்தில் இருந்த நான்கு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும், அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். எனினும் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார இதனை முன்னர் மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதற்கு மறுநாள் அதிகாலை 3.00 மணியளவில் அச்செழு, வரணி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகளும், பல்குழல் உந்து கணைகளும் முகமாலை –கிளாலி பகுதிகளில உள்ள விடுதலைப்புலிகளின் நிலைகளில் வீழந்து வெடிக்க ஆரம்பித்தன. இரு மணிநேரம் நடைபெற்ற இந்தத் தாக்குதல்களை தொடர்ந்து காலை 5.00 மணியளவில் இராணுவத்தின் 55 ஆவது படையணி மற்றும் 53 ஆவது சிறப்பு தாக்குதல் படையணிகளை சேர்ந்த 8 தொடக்கம் 10 பற்றலியன்கள் படையினர் முகமாலை – கிளாலி அச்சில் உள்ள விடுதலைப்புலிகளின் முன்னணி அரங்குகளை கைப்பற்றும் முகமாக நகர்வை ஆரம்பித்தனர்.

இராணுவத்தின் கவசத்தாக்குதல் படை யணியினரின் கவசவாகனங்களை உருமறைப்பு செய்யப்பட்ட பொறிக் கிடங்குகள் மூலம் விடுத லைப் புலிகள் கைப்பற திட்டமிட்டுள்ளதாக கிடைத்த புலனாய்வு தகவல்களை தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மேறகொள்ளப்பட் நடவடிக்கை போல் அல்லாது இம்முறை திட்டம் மாற்றப்பட்டது.



அதாவது சிறப்பு படை மற்றும் இலகு காலாட்படை அணிகள் முதலில் ஊடுருவி விடுதலைப்புலிகளின் நிலைகளை கைப்பற்றுவது எனவும், பின்னர் பின்தளத்தில் இருந்து ஆதரவு சூடுகளை வழங்கிவரும் கவசத்தாக்குதல் படையணி விரைவாக முன்நகர்ந்து முன்நகர்ந்த படையினர் தம்மை பலப்படுத்த ஆதரவு வழங்குவது எனவும் திட்டம் வகுக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப்புலிகளின் திட்டம் வேறுபட்டது. அதாவது கவசத்தாக்குதல் படையினருக்கு எதிரான தாக்குதல் உத்திகளை அவர்கள் வகுத்துள்ளதுடன், முன்நகரும் இலகு காலாட்படையினரை மடக்கும் திட்டங்களும் வகுக்கப்பட்டிருந்தன. அதற்கு ஏதுவாக தமது முன்னனி அரண்களுக்கு சற்று முன்னராக போலியான பல பாதுகாப்பு அரண்களும், பதுங்குகுழிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

அந்த நிலைகளில் இருந்து ஒரு சில விடுதலைப்புலிகள் அவ்வப்போது தாக்குதலை நடத்திவிட்டு தமது நிலைகளுக்கு சென்று விடுவதுண்டு. ஆனால் படையினரில் வரைபடத்தில் போலியான பதுங்குகுழிகள் மிகவும் பலமானதாகவே குறிக்கப்பட்டிருந்தது. மறுபுறத்தில் இந்த அரண்களின் அமைவிடங்களுக்கான துல்லியமான எறிகணை வீச்சுப் புள்ளிகள் விடுதலைப்புலிகளிடம் இருந்தன.

அதிகாலை முன்நகர்வை ஆரம்பித்த படையினரை போலியாக அமைக்கப்பட்ட தமது முன்னனி அரண்வரையில் அனுமதித்த விடுதலைப்புலிகள் காலை 9.30 மணியளவில் கடுமையான தாக்குதல்களை ஆரம்பித்தனர். கேணல் கிட்டு பீரங்கி படையணி மற்றும் லெப. கேணல் குட்டிசிறீ மோட்டார் படையணிகளின் செறிவான எறிகணை வீச்சுக்களுடன் விடுதலைப்புலிகளின் சிறப்பு அணிகள் களமிறங்க மோதல்கள் உக்கிரமடைந்தது. சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற உக்கிரசமரை அடுத்து படையினர் தமது நிலைகளுக்கு பின்வாங்கியுள்ளனர்.

எறிகணை வீச்சுக்கள், நேரடித்தாக்குதல்கள், சினைப்பர் தாக்குதல்கள், பொறி வெடிகள் என படையினர் எதிர்பார்த்ததை விட களம உக்கிரமாகவே இருந்ததாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளின் வியூகப் பொறிக்குள் தாம் சிக்கிவிட்டதை உணர்ந்த படையினர் அவசரமாக பின்வாங்கியிருந்தனர். இறந்த தமது சகாக்களின் சடலங்களை கூட அவர்கள் கைவிட்டு சென்றதில் இருந்து களத்தின் உக்கிரத்தை நீங்கள் புரிந்து கொள்ளமுடியும்.

இந்த மோதல்களில் 100 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 400 இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் 30 படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும், தமது தரப்பில் 16 போராளிகள் பலியானதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இராணுவத்தினரின் 28 சடலங்களை அவர்கள் அனைத்துலக செஞ்சிலுவை சங்கத்தினூடாக கடந்த வியாழக்கிழமை இராணுவத்திடம் கையளித்திருந்தனர். இந்த மோதலில் கைப்பற்றப்பட்ட 60 வரையிலான இலகு ரக மற்றும் கனரக ஆயுத தளபாடங்களின் பட்டியலையும் அவர்கள் வெளியிட்டிருந்தனர்.

எனினும் தமது தரப்பில் 43 படையினர் கொல்லப்பட்டதாகவும், 33 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 120 இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் 88 படையினர் கொல்லப்பட்டதாகவும், 30 பேர் காணாமல் போயுள்ளதாகவும், 376 பேர் காயமடைந்துள்ளதாகவும் 03 ரீ-55 ரக போர் டாங்கிகளும், 04 கவசத் தாக்குதல் வாகனங்களும் கடுமை யாக சேதமடைந்துள்ளதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் சுயாதீன செய்தி இணையத்தளங்கள் தெரிவித்துள்ளன. காயமடைந்தவர்களில் 250 பேர் கடுமையாக காயமடைந்துள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன.

இதனிடையே 100இற்கு மேற்பட்ட படையினர் பலியானதாகவும், 400இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி சிஎன்என் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட் டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த பத்தி எழுதப்படும் போதும் படையினரின் இழப்புக்கள் தொடர்பான சரியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. அது மேலும் அதிகரிக்கலாம் என்ற ஊகங்கள் பலமாக எழுந்துள்ளன.

மேலும் இந்த மோதல்கள் தொடர்பாக படைத்தரப்பு ஆரம்பத்தில் தெரிவித்துள்ள தகவல்கள் ஒன்றுக்கு ஒன்று முரணானவை. அதாவது தமது நிலைகள் மீது விடுதலைப் புலிகள் வலிந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும், அதனை தாம் முறியடித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ள போதும், படையினர் விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலை நோக்கி 400 மீ தூரம் முன்நகர்ந்த போதே மோதல்கள் ஆரம்பமாகியதாக சிறீலங்கா பாதுகாப்பு இணையத்தளம் (www.defence.lk) தெரிவித்துள்ளது.

மனித நடமாட்டமற்ற பகுதிகளிலும், பதுங்கு குழிகளினுள்ளும் சிதறிக்காணப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களும், விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட சடலங்களும் இராணுவம் ஒரு வலிந்த தாக்குதலை மேற்கொண்டதையே எடுத்து காட்டியுள்ளது.

விடுதலைப்புலிகளின் வடபோர்முனை கட்டளை தளபதி கேணல் தீபனின் கட்டளை பீடத்தின் கீழ்வரும் இந்த 20 கி.மீ நீளமான முன்னரங்கில் இராணுவம் சந்தித்த மூன்றாவது பெரும் தோல்வி இதுவாகும். இந்த பகுதி படையினருக்கு எப்போதும் அதிர்ச்சிகள் நிறைந்ததாகவே இருப்பதுண்டு.

2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமும், கடந்த வருடம் நவம்பர் மாதமும் இந்த பகுதிகளில் நடை பெற்ற மோதல்களில் படையினர் பெரும் இழப்புக்களை சந்தித்திருந்தனர்.

**வேல்ஸிலிருந்து அருஷ்**

இராணுவத்தின் முன்னனி தாக்குதல் படையணியான 53 மற்றும் 55 படையணிகள் இந்தப் பகுதிகளில் பெரும் இழப்புக்களை சந்தித்து வருவது யாழ்.குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் போரிடும் வலுவில் கணிசமான தாக்கத்தை உண்டுபண்ணலாம்.

தற்போதைய சமரில் மூன்று மணி நேரத்தில் இராணுவம் தனது முன்னனி படையணிகளின் மிகச்சிறந்த படையினரில் ஏறத்தாள ஒரு பற்றலியனுக்கு மேற்பட்ட துருப்புக்களை இழந்துள்ளது. தென்னிலங்கையில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது. கஜபா றெஜிமென்ட் படையணியின் கெமுனு வோச் பற்றலியன் படையினரும், 53 ஆவது படையணியின் வான்நகர்வு பிரிகேட் படை யினரும் அதிக இழப்புக்களை சந்தித்துள்ளனர். இந்த பற்றலியன் படையினர் சிறப்பு தாக்குதல் பற்றலியன்கள் ஆகும்.

அதிக எண்ணிக்கையான விடுதலைப் புலிகளை கொன்று வருவதாகவும், அவர்களின் ஆயுத வளங்கள், தளபதிகள் கூடும் மையங்கள் அகியவற்றை வான்குண்டு தாக்குதல் மூலம் அழித்து வருவதாகவும் படைத்தரப்பு தினமும் அறிவித்து வரும் நிலையில் முகமாலை களமுனையில் இராணுவம் சந்தித்துள்ள இழப்புக்கள் அரசின் பிரச்சார போருக்கு பேரும் பின்னடைவை எற்படுத்தி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை மேலும் சுருக்கமாக கூறினால் அரசின் பிரச்சார போர் அதனையே பல முறை பதம்பார்த்து விடுவதுண்டு. அதில் நடைபெற்று வரும் நாலாம் கட்ட ஈழப் போரில் முகமாலையில் இது மூன்றாவது தடவை என்பதுடன், முகமாலை சமர் எதிர் வரும் வாரங்களில் தென்னிலங்கையில் பல சூடான விவாதங்களை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நன்றி:வீரகேசரி வாரஏடு**

சண்டை செய்ய விரும்புகிறவனுக்கு ஒவ்வொரு வேலியிலும் கம்பு தென்படும்.
- இங்கிலாந்து

வலம்புரி

# யுத்தத்தின் முன்னெடுப்பு உயிரிழந்தோருக்கு உதவுமா?

யுத்தத்தின் கொடுமை மனித உயிரிழப்புகளாகவே அமையும். அதுவே தற்போது நாட்டில் நடந்த வண்ணமுள்ளது.

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற வாசகத்துடன் அரசு முன்னெடுத்துள்ள போர் விடிவைத் தருமா? அது நாட்டிற்கு மீட்பைத் தருமா? என்ற கேள்விகள் எழுகின்றபோது அதற்கான விடை மௌனமாகவே அமையும்.

வடபகுதியில் அரச யுத்த விமானங்கள் குண்டுவீசி அப்பாவி பொது மக்களை கொன்றொழிக்கின்றன.

அதேநேரம் தென்பகுதியில் இடம்பெறும் குண்டுவெடிப்பினால் அப்பாவி பொதுமக்கள் இறந்து போகின்றனர். எனினும் துரதிர்ஷ்டவசமாக வடபகுதியில் அரச விமானங்கள் நடத்தும் தாக்குதலினால் அப்பாவி பொதுமக்கள், சிறுவர்கள், மாணவர்கள் இறந்து போகின்ற போதிலும் அதுபற்றிய தகவல்கள் வெளியுலகத்திற்குச் செல்வதில் பல்வேறு சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

அதாவது வடபகுதியில் அரச விமானத் தாக்குதல்களின்போது அப்பாவிப் பொதுமக்கள் பலியாகின்றனர்.

எனினும் அரசு அதனை மூடி மறைத்து பொது மக்கள் மீது நாம் தாக்குதல் நடத்தவில்லை என்றும் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் மீதே தாக்குதல் நடத்தியதாகவும் உயிரிழந்தவர்கள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்றும் அரசு கூறிவிடுகின்றது.

ஓர் அரசினால் கூறப்படும் கருத்தை ஏற்றுக் கொள்ளும் தன்மை சர்வதேசத்திடம் இருப்பதால், தமிழ் மக்கள் வதைக்கப்படும் கொடூரம் முழுமையாக வெளிப்படாமல் போகின்றது.

இந்நிலையில் தென் பகுதியிலும் ஆங்காங்கே குண்டுவெடிப்புகள் இடம்பெறுவதும் பொது மக்கள் உயிரிழந்துபோவதுமான நிகழ்வுகள் நடந்த வண்ணமுள்ளன. இவை யாவற்றினதும் ஒட்டுமொத்த முடிவு அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்பாகவே உள்ளது.

ஆக, பொது மக்களின் உயிரிழப்புக் குறித்து அரசு உடன் நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் அது இக்கணமே யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதாக இருக்கும்.

உலக நாடுகளிடம் கையேந்தி சீவியம் நடத்துவதைவிட, போராயுதங்களை கொள்வனவு செய்து சொந்த உறவுகளைக் கொல்வதை விட சொந்த நாட்டில் சோதரர் நாம் பிரச்சினையைத் தீர்த்து எல்லோரும் எல்லா உரிமையும் பெறக் கூடியதான தீர்வைக் கண்டால் இந்த நாட்டில் மரண ஓலங்கள் நின்று போகும்.

ஆகவே இதுவரை காலமும் இழந்துபோன இந்த நாட்டின் மானிடத்திற்கு நாம் செய்கின்ற இறுதி அஞ்சலியும் ஆத்ம ஈடேற்ற பிரார்த்தனையுமாக இருக்கும்.

இதை விடுத்து போர் தான் எங்கள் சொந்தம் அதனை நடத்தி நாட்டை முழுமையாக எங்கள் அதிகாரத்துக்குள் கொண்டுவந்து சிங்களத்தை -பௌத்தத்தை முதன்மைப்படுத்துவோம் என முடிவு செய்தால் அது அழிவாக அமைவது மட்டுமன்றி உயிரிழந்துபோன ஆத்மாக்களை மேலும் அவலப்படுத்துவதாகவே அமையும்.

# இலங்கைத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் கொள்கை நம் கொள்கை என இருக்கக்கூடாது

## தமிழக சட்டப்பேரவையில் ம.தி.மு.க வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் கொள்கை தான் நம்முடைய கொள்கை. அவர்கள் எதனைச் சொல்கிறார்களோ அதனை நாம் பின்பற்றுவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது என்று தமிழ் நாடு சட்டப் பேரவை விவாதத்தில் முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கடந்த புதன் கிழமை தமிழ் நாட்டு சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் போது ம.தி.மு.க உறுப்பினர் மு. கண்ணப்பன் பேசியதாவது, இலங்கை நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கப்படக்கூடிய சூழ்நிலை இலங்கை நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது.

அங்கே இருக்கக் கூடிய தமிழர்கள் சிங்கள மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் ஈழத்து காந்தி என்று மதிக்கப்படுகின்ற தந்தை செல்வா அவர்களும் பண்டாரா நாயக்க அவர்களும் 1957 ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தார்கள். அந்த ஒப்பந்தம் கிடப்பிலே போடப்பட்டது.

அதேபோல 1965 ஆம் ஆண்டில் தந்தை செல்வா – சேனநாயக்க ஒப்பந்தம் அதுவும் கிடப்பில் போடப்பட்டது.

அதேபோல் இந்திய நாட்டுடன் 1954 ஆம் ஆண்டில் பண்டித ஜவகர்லால் நேரு கொத்தலாவல ஒப்பந்தம் அதுவும் செயற்படுத்தப்படவில்லை. 1962 ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்க சாஸ்திரி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அதுவும் கிடப்பில் போடப்பட்டது. மீனவர்கள் உரிமை சம்பந்தமாக 1976 ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது அதுவும் செயற்படுத்தப்படவில்லை.

கடைசியாக 1987 ஆம் ஆண்டில் ராஜீவ்காந்தி– ஜெயவர்தன ஒப்பந்தம் அந்த ஒப்பந்தமும் முறையாகச் செயற்படுத்தப்படாமல் கிடப்பிலே போடப்பட்டது.

இன்று அங்கே இனப்பிரச்சினை தலைதூக்கி கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கின்றது. 1987 ஆம் ஆண்டிலே இந்தியா–சிறிலங்கா ஒப்பந்தத்தில் வடக்கு –கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் தமிழர்களின் வரலாற்று வாழ்விடம் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

இது 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி பொதுமக்களால் வாக்கு அளிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு வடக்கு –கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு அதற்குப் பிறகு ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில் அங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தில் 1987 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கு மாறாக இலங்கை அரசே அங்கே இருக்கக்கூடிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அவர்களே நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள்.

இரண்டு மாகாணங்களாக இருக்க வேண்டும் என்று இப்போது வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனியாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இப்போது கிழக்கு மாகாணத்தில தேர்தல் என்று அறி வித்து தமிழர்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து சிங்களவர்களை அங்கே குடியேற்றி மீண்டும் இனப்பிரச்சினை அதிகமாகக்கூடிய சூழ்நிலையை அங்கே உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

அதேபோல 1987 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தின் பல்வேறு இடங்கள் இன்று மீறப்பட்டு இருக்கின்றன. இந்த ஒப்பந்தம் என்பது இந்தியா– இலங்கை ஒப்பந்தம். சுயாதிபத்திய உரிமை கொண்ட இரண்டு அரசுகளுக்கு இடையில் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். அனைத்துலக சட்டத்தின் கீழ் வலுவாக இருக்கக் கூடிய ஓர் ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு தட்டிக் கழிப்பதனை இந் திய அரசு எந்த வகையிலும் அனுமதிக்கக்கூடாது என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

### இலங்கை அரசின் கடந்த கால வரலாறு

ஒப்பந்தங்கள் போடுவதும் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் பின்வாங்குவதும் இலங்கை அரசின் கடந்த கால வரலாறு . ஆகவே அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கபடாமல் 1987 ஆம் ஆண்டில் போடப்பட்ட ஒப்பந்தத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல இன்று விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் ஒடுக்குகின்றோம் என்ற பெயரில் ஈழத்துதமிழ் மக்கள் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். குழந்தைகள், தாய்மார்கள் அதே மாதிரி மதத்தலைவர்கள், இந்துக் கோயில்கள், கிறிஸ்தவக் கோயில்கள் இப்படி நாள்தோறும் அவை எல்லாம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட படுகொலைகளையும் தடுத்து நிறுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் அருகில் இருக்கக்கூடிய நம்முடைய நாட்டிற்கு இருக்கிறது என்ற அடிப்படையில் ஏதோ மத்திய அமைச்சின் கொள்கைதான் நம்முடைய கொள்கை. அவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதை நாம் பின் பற்றுவோம் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்காமல் தமிழர்கள் வாழக்கூடிய பகுதி நம்முடைய இனமக்கள் அங்கே இருக்கிறார்கள் என்ற உணர்வோடு நம்முடைய கருத்தை வலியுறுத்தி இந்திய அரசாங்கத்தை செயற்பட வைக்க வேண்டும். (அ-5)

# சதாவதானியின் 101 ஆவது ஆண்டு நினைவு விழா

(பருத்தித்துறை)

தம்பசெட்டி, சதாவதானிநா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் சதாவ தானி 101ஆவது ஆண்டு நினைவு விழா இன்று ஞாயிற்றுக் கிழமைபி.ப 3மணிக்குசதாவதானிஅரங்கில் நிலையத் தலைவர் கி.குகநாதன் தலைமையில் நடை பெற உள்ளது.

விழாவில் முதன்மை விருந்தினராக பருத்தித்துதுறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ் வரன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச் சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை வழங்குவார். அத்துடன் குருபூசை தினப்போட்டி களில் முதலிடம் பெற்ற பேச்சுக்களும், செஞ் சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் "நடுவர் தீர்ப்பு" எனும் தாளலய நாடகம் ஆகியனவும் இடம்பெறும். போட்டிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கான பரிசில்களை திருமதி உமா. வரதீஸ்வரன் வழங்கிக் கௌரவிப்பார். (ஓ)

# பாடசாலை சிறார்களுக்கு பசுப்பால் வழங்கல்

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி சி. வசீகரனின் உதவியுடன் பருத்தித் துறை ஸ்ரீ ராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமம் சிறுவர்களுக்கு பசுப்பால் வழங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்துக்கமைய நாளை திங்கட் கிழமை சித்திவிநாயக பாடசாலையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் 100 சிறார்களுக்கு பசுப்பால் வழங்குவார்.

30ஆம் திகதி புதன்கிழமை கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்திய சீலன் அல்வாய் சின்னத் தம்பி வித்தியாலயத்தில் 100 சிறார்களுக்கு பசுப்பால் வழங்கவார்.

இந் நிகழ்ச்சி வாரத்தில் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறுமென ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (கு)

# இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் விசுவாச வாழ்வு

**விசுவாசமுள்ள ஒவ்வொருவரும் கடவுளின் அருஞ்செயலே – கமாலி யேல் வெய்லி**

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் பலவிதமான அனுபவங்கள்.... இவைகள் அம்மனிதரை ஆழமாக பாதிப்பதில்லை. ஆனால் சில அனுபவங்கள் உச்ச அனுபவங்களாக அமைவது உண்டு. இவைகள் அம்மனிதனின் வாழ்வையும் ஆள்தன்மையையும் முழுவதுமாகப் பாதிக்கின்றன. இயேசு வின் வாழ்விலும் ஏற்பட்ட உச்ச அனுபவம் ஒன்று உண்டு. ஆனால் அது இரண்டு இடங்களில் ஏற்பட்டது. அது யோர்தான் நதியிலும், தாபோர் மலையிலும் இயேசுவுக்குக் கிடைத்த அப்பா அனுபவம் (Abba Experience) ஆகும். இந்த அனு பவம் தான் அவரை ஏழைகளுக்காக, பாவிகளுக்காக பாடுபட, நிலைப்பாடு எடுக்க வைத்தது. ஆனால், அதே வேளையில் இயேசுவின் வாழ்வில் அவருக்கு நடந்த சில நிகழ்வுகள் நமக்கு இன்று உச்ச அனுபவங்களாக அமைந்து நம்மை வாழவைக்கின்றன என்றால் அது மிகையாகாது.

இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறின் கடைசி வாரத்தில் இருக்கின்றோம். அடுத்த ஞாயிறு இயேசுவின் விண்ணேற்பு ஞாயிறு.

இயேசுவின் உயிர்ப்பை நமது அனுபவமாகக் கொண்டு பார்க்கின்ற போது அது நம்மை அர்த்தமுள்ள விசுவாச வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது. இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் என் பது ஒன்றைக் கடந்து இன்னொன்றுக் குள் நுழைவது. இயேசு சாவைக் கடந்து வாழ்வுக்கு நுழைந்தார். அவரே இன்று நமக்கு

**பரமபிதா காட்டிய பாதை**

வாழ்வாக இருக்கின்றார். அவரே சொல்லியிருக்கின்றார். 'வழியும், உண்மையும், வாழ்வும் நானே' நான் உங்களை திக்கற்கவர்களாக விடமாட்டேன் என்று இயேசு சொல்லியிருப்பது நமக்கு வாழ்வை அளிக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறது.

நம் ஆண்டவர் இயேசு இறந்தோரின் கடவுள் அல்லர் வாழ்வோரின் கடவுள் இவர் தன்னை இருந்தவர் இருக்கின்றவர், இருக்கப்போகின்றவர் என்று மோசேவுக்கு வெளிப்படுத்தியவர்.

நம் வாழ்க்கை என்னும் கப்பலை ஓட்டுபவர் இயேசு. அவர் நம்மை எல்லாம் தீமைகளிலிருந்து காப்பாற்றி, நிறை வாழ்வு என்னும் கரைக்கு அழைத்துச் செல்வார்.



ஆனால், நாம் அவரில் முழுநம்பிக்கை கொண்டு பயணம் செல்லும் போது நாமும் இந்த நிறைவாழ்வை அடைவோம். இதற்கு இயேசுவின் உயிர்ப்பு நமக்கு அனுபவமாக அமைந்து விசுவாச வாழ் வுக்கு அழைத்துச் செல்லட்டும்.

ஜோன் றொபேர்ட்






## மடு மாதா தேவாலயப் பகுதி

# சமாதான வலயமாக்குவதை அரசே தீர்மானிக்க வேண்டும்

மடு மாதா தேவாலயப் பிரதேசத்தை சமாதான வலயமாக பிரகடனப்படுத்துவது குறித்து அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். இராணுவத்தினர் தற்போது மடு மாதா தேவாலயப் பிரதேசத்தில் தமது நிலைகளை பலப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினர் தற்போது மடுப் பகுதியில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அப்பகுதிகளில் உள்ள பாதைகளை செப்பனிட வேண்டிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

மடு மாதா தேவாலயப் பகுதியை சமாதான வலயமாக பிரகடனப்படுத்த வேண்டிய தீர்மானத்தை அரசாங்கமே எடுக்க வேண்டும் எனவும் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார். இதேவேளை மடுமாதா தேவாலயப் பகுதியை மோதல் தவிர்ந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தக்கூடாது என பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கயிருப்பதாக நம்பகரமாக தெரிய வருகிறது. (ந-5)

# தந்தை செல்வாவின் 31 ஆவது நினைவு நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை தந்தை செல்வாவின் 31-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் பேராயர் கலாநிதி ஜெபநேசன் தலைமையில் தந்தை செல்வாவின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

தொடர்ந்து தந்தை செல்வாவின் நினைவுத் தூபியின் அருகில் அமைந்துள்ள சமாதியில் மலரஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், நல்லைக் குருமுதல்வர் உட்பட பலரும் மலரஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து நேற்று மாலை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடந்த அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.விக்னேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டு அஞ்சலியுரையாற்றினர். (ந-5)

## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

ஆனைக்கோட்டைப் பகுதியில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ப. பகீரதன் என்ற 8 வயதுச் சிறுவனே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-2,3,4)

## விமான சேவை திங்கள், செவ்வாய் இல்லை

கொழும்பு - யாழ்ப்பாணம் விமான சேவைகள் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை கொழும்பு வரும் ஈரான் ஜனாதிபதியின் வருகையை ஒட்டியே விமான சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ந-5)

## எம்.ஆர்.ரி.சி. பணிப்பாளராக பேரா.பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் (எம்.ஆர்.ரி.சி.) பணிப்பாளராக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊடக வளங்கள் பயிற்சி மையம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஒரு நாள் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

6-வது மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கு டயானும், யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு கரிப்பிரவீனும் தலைமை தாங்கினர். இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணித் தலைவர் டயான் முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, துடுப்பெடுத்தாடியபோது மழை குறுக்கீடு செய்தமையால் போட்டி 43 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் 43 ஓவர்கள் நிறைவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. இதில் லாருஷன் 60 பந்துகளில் (6 பவுண்டறிகள் உட்பட) 43 ஓட்டங்களையும் அச்சுதன் 26, பிரணவன் 24, கஜீவன் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித் தலைவர் டயான் 9 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் செல்டன், ஜெரிக்துஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 43 ஓவர்க்ளில் 175 ஓட்டங்களை எடுத்தால் வெற்றிஎன்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி, 41.1 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 175 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

இதில் நவநீத் 28 ஓட்டங்களையும் ஜேம்ஸ் ஜான்சன் 26, கோபிகன் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் தவநீதன் 8 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சுகதாஸ் 8 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ். மத்திய கல்லூரி அணியின் தலைவர் பாஸ்கரன் டயான் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் இரு கல்லூரிகளுக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி இரண்டாவது முறையாக வெற்றி பெற்றது.

இதற்கு முன்பு கடந்த 2007 ஆம் ஆண்டிலும் 5 ஆவது ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. அத்துடன் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தொடர்ச்சியாக 4 முறை வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த வாரம் நடைபெற்ற இரு கல்லூரிகளுக்குமிடையிலான 102-வது வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் இன்னிங்ஸ் போட்டியிலும் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஜெயராஜ்...

இதனைக் காரணமாகக் காட்டி குறிப்பிட்ட பல்கலைக் கழக மாணவரின் தந்தையார் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை அந்த பல்கலைக்கழக மாணவரும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அடுத்த வாரம் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சையில் கலந்து கொள்வதற்கு குறிப்பிட்ட மாணவர் அனுமதிக்கப்படவேண்டுமென அவரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-5)

## விடுதலைப்புலிகளின் பதில...

பௌத்த பிக்குகளும் சிங்களப் படைகளுக்கு ஆட்களைத் திரட்டுகின்றனர். இந்த நிலையில் தமிழர்கள் நாம் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய நிலையில் உள்ளோம்.

எமக்குப் பெரிய பலம் மாணவர் சக்திதான். உலகிலேயே பல விடுதலைப்போராட்டங்களில், புரட்சிகள் நடைபெற்ற தேசங்களில் மாணவர்களே போராட்டங்களை முன்னின்று நடத்தி வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

இந்த நிலையில் மாணவர் சக்தியைக் கொடிய போரைத் திணித்துள்ள சிங்கள அரசின் செயற்பாட்டிற்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும். சிங்கள அரசின் போர் நடவடிக்கைகளுக்கு வடபோர் முனையிலும் மன்னார் களமுனைகளிலும் தகுந்த பதிலடி வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பதிலடி சிங்கள அரசை ஆட்டம் காண வைத்துள்ளது. தமிழீழத் தேசியத் தலைவரின் தலைமையில் தமிழர்களின் வீர மரபு, போர்க் களங்களில் வெளிப்பட்டு வருகின்றன.

போரைத் திணித்துள்ள சிங்கள அரசுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடி சகல அடக்கு முறைகளையும் உடைத்து எறிய வேண்டும் என்றார் பா.நடேசன். (ந-5)

## வடக்கைக் கைப்பற்றும்...

கடந்த புதன்கிழமை முகமாலை முன்னரங்கப் பகுதியில் படைத் தரப்பினருக்கு ஏற்பட்ட இழப்புக்களானது வடக்கை முழுமையாகக் கட்டுப்படுத்தும் தமது நோக்கத்தைத் தடுக்காது எனவும் விடுதலைப்புலிகளின் பலத்தைத் தாம் குறைத்து மதிப்பிடவில்லை எனவும் கொழும்பு ஊடகமொன்றிடம் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் கடந்த கால மோதல்களில் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தித்த போதும் வடக்கை முழுமையாகக் கைப்பற்றும் காலம் மிகத் தொலைவில் இல்லையென அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

முகமாலை மோதல்களில் 150 பேர் கொல்லப்பட்டதாகவும் இதற்கு உயர் இராணுவ அதிகாரிகளின் கவனயீனமே காரணமென்வும் வெளியான தகவல்களை மறுத்திருக்கும் இராணுவத் தளபதி 53 மற்றும் 55 ஆம் படைப் பிரிவுகள் எதிரிகளின் பலம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்தே வந்ததாகவும் கூறியுள்ளார்.

இந்த மோதலில் ஈடுபட்டிருந்த 53 ஆம் 55 ஆம் படைப் பிரிவுகள் தமது எல்லையை எட்டியிருப்பதாகவும் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா அந்த ஊடகத்திடம் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## மடு மாதாவின் சொருபத்...

நேரில் கண்டறிந்து வருவதற்காக நேற்று குருமுதல்வர் விக்டர் சோஸ்சயை அனுப்பி வைத்துள்ளேன். மடு மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் தேவால யத்திற்குக் கொண்டு வருமாறு எவரும் எம்மிடம் கோரிக்கை விடுக்கவில்லை.

மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் கொண்டு வந்து தேவாலயத்தில் வைப்பதில் எந்தவிதமான பிரச்சினையுமில்லை. மடு மாதா தேவாலயத்தை சுற்றிவர இரண்டரை கிலோமீற்றரை அமைதி வலயமாக பிரகடனப்படுத்துமாறு படையினரிடமும் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இதனை ஏற்றுக் கொண்டதாக இருதரப் பினரும் பகிரங்கமாக உறுதிமொழியளிக்க வேண்டும். குறித்த அமைதி வலயத்தில் எவரும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

இவ்வாறான பகிரங்க உறுதி மொழி கிடைக்கும் பட்சத்தில் திருச்சொரூபத்தை மடு மாதா தேவாலயத்திற்குக் கொண்டு வந்து திருநிலைப்படுத்த முடியும் என ஆயர் மேலும் தெரிவித்தார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2, இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.